விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே



சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 20 வியாழக்கிழமை (05.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 229

அரச, தனியார்துறை ஊழியர்களின்

## குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் 25 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க வேண்டும்

### பாராளுமன்றில் விஜித ஹேரத் வலியுறுத்து

(கொழும்பு)
அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் 25 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், பாராளுமன்றில் வலியுறுத்தினார். 19

யாழில் கடந்த ஒரு வாரத்தில்

## 1,35,760 பேர்

### கோவிட் தடுப்பூசி பெற்றுள்ளனர்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றுடன் ஒரு வாரத்தில் ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 760 பேர் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். 19

## வவுனியாவில் நபர் ஒருவரின் சடலம் மீட்பு

(வவுனியா)
வவுனியா வேப்பங்குளம் பகுதியில் வீதியோரத்தில் இருந்த மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் நபர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். 19

நிலைமை கட்டுப்பாட்டை மீறினால்

# நாட்டினை முடக்குவதே அரசுக்கு இருக்கும் ஒரே வழி



### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்

(கொழும்பு)
நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டை மீறினால் நாட்டை முடக்குவதே அரசுக்கு இருக்கும் ஒரே வழி என சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

கொரோனா

## +2,543

(கொழும்பு)
நாட்டில் நேற்று மேலும் 2,543 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 19

## நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம்

### உட்பிரகாரத்தில் 100 பேருடன் நடத்துவதற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)
வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமிஆலய வருடாந்த மகோற்ச 19

## கொரோனாத் தொற்றாளர்களால் நிரம்பிவழியும் வைத்தியசாலைகள்

### அசமந்தப்போக்கில் ராஜபக்ஷ அரசு; சபையில் ஐ.தே.க தலைவர் ரணில்



(கொழும்பு)
"கொரோனா வைரஸ் தொற்றாளர்களால் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. 19

## வட மாகாணத்தில் கொரோனா உச்சம்; 130 தொற்றாளர்கள் நேற்றும் அடையாளம்

### யாழில் 84 பேருக்கு தொற்று

(கொழும்பு)
யாழ்.மாவட்டத்தில் 84 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 130 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடம், யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 19

அதிகரிக்கும் கோவிட் மரணங்கள்

## நாட்டில் மேலும் 82 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 82 பேர் மரணித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.
இதற்கமைய நாட்டில் இதுவரையில் 19

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

## கொரோனாவால் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா நோயாளி ஒருவர் 19

## பருத்தித்துறையில் விபத்து முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை புலோலிசாரையடிப் பகுதியில் நடைபெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்று மாலை இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.
இதில் புலோலி சாரையடிப் பகுதியைச் சேர்ந்த செபஸ்ரியன் பாலேந்திரன் (வயது-82) என்பவரே உயிரிழந்துள்ளார்.
சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற (19)

கொரோனா தீவிரம்

## இரு மருத்துவமனைகளில் அவசரநிலை பிரகடனம்

(கொழும்பு)
கோவிட் -19 தொற்றுநோய் நெருக்கடியை அடுத்து காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சுகாதார அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
வைத்தியசாலையில் தொற்று நோயாளர் தொகை அதிகரித்துள்ளதுடன், வைத்திய சாலை ஊழியர்கள் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அளவெட்டி வைத்தியசாலையில் சிறுவர்கள் 6 பேர் உட்பட 12 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

6வயது இரட்டையர்களான பெண் குழந்தைகள் இருவருடன் சிறுவர்கள் ஆறுபேர் உட்பட அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் இருந்து பெறப்பட்ட 19 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் இவ்வாறு 12 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர்களில், 6வயதுடைய இரட்டையர்களான பெண் குழந்தைகள் இருவர், 6, 8 வயதுடைய பெண் குழந்தைகளுடன் அவர்களின் தாயார் (வயது-42), 13வயது சிறுமி, 14 வயது சிறுவன் ஆகியோருடன் 32, 42, 44, 63 வயதுடைய பெண்கள், 38, 73 வயதுடைய ஆண்களும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# வவுனியா மாவட்டத்தில் கைதிகள், சிறுவர்கள் உட்பட 25 பேருக்கு கொரோனா

(வவுனியா)

சிறைக் கைதிகள் மூவர், 2வயது ஆண் குழந்தை உட்பட 12 சிறுவர்களுடன் வவுனியா மாவட்டத்தில் மேலும் 25 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவ்வாறு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் 25 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சிறைக் கைதிகள் 23 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் அவர்களில் மூவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் 28, 29, 43 வயது ஆண் கைதிகளாவர். அத்துடன், வவுனியாவில் இருந்து பெறப்பட்டிருந்த 116 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் மேலும் 22 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-03)

# சிறையில் 24 மணி நேரமும் மூடிய அறைக்குள் அடைத்து வைத்துள்ளனர்

## மலசலகூடத்துக்கு மட்டும் வெளியில் செல்ல அனுமதி

## கோட்டா முன் சபையில் ரிஷாத் பதியுதீன்

(கொழும்பு)

சிறையில் 24 மணிநேரமும் மூடிய அறைக்குள் வைத்துக் கொண்டு, தன்னை மலசலகூடத்துக்கு மட்டும் வெளியில் செல்ல அனுமதிப்பதாக, சி.ஐ.டியில் 102 நாட்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நேற்று (04) அவர் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டுவந்தபோதே இவ்வாறு தெரிவித்தார். பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய ரிஷாத் சபாநாயகர் அவர்களே, ஜனாதிபதியும், பிரதமரும் இந்தச் சபையில் இருக்கின்றார்கள். என்னை கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி கைது செய்தார்கள். வெறும் 5 நாட்கள் மாத்திரமே என்னை விசாரணை செய்தார்கள். 102 நாட்கள் என்னை தடுத்து வைத்துள்ளார்கள். 97 நாட்கள் வரையில் அறையில் அடைத்து வைத்துள்ளார்கள். 24 மணிநேரமும் அந்த அறை மூடப்பட்டு, மலசலகூடத்துக்கு மட்டும் என்னை வெளியில் செல்ல அனுமதிக்கிறார்கள். இன்றுவரை, எந்தவிதமான விசாரணைகளும் இடம்பெறவில்லை. நான் பொய் கூறவில்லை. வேண்டுமென்றால் வந்து பார்க்க முடியும்.

ஜனாதிபதி அவர்களே, இன்னுமொரு விடயம். என்னைக் கைது செய்த போது, பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் "என்னை ஏன் கைது செய்கிறீர்கள்?" என்று நான் கேட்டபோது, எனது அமைச்சில் பணிபுரிந்த மேலதிக செயலாளர் பாலசுப்பிரமணியத்துடன், ஒன்றரை நிமிடம் தொலைபேசியில் உரையாடியதாக கூறினார்கள். இதனால்தான் என்னை கைது செய்துள்ளதாக கூறினார்கள். வேறு எந்தக் காரணமும் இல்லை என்றார். (ம-03)

# பிறந்து ஒரு நாளேயான சிசு மரணம்

பிறந்து ஒரு நாளேயான சிசு ஒன்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

நாகர் கோவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பகல் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிசு ஒன்றை பிரசவித்துள்ளார்.

ஆனால் அச் சிசு இரவு மரணமடைந்துள்ளது. இது தொடர்பான விசாரணை இன்று வியாழக்கிழமை (05) இடம்பெறவுள்ளது. (ம-03,60)


## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் வெதுப்பகம் ஒன்றிற்கு பேக்கரி வேலை தெரிந்த வேலையாட்கள் உடன் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு (7553)

077 165 3770


# ஆசிரியர்கள் ஒப்பமிட வேண்டும் சமூகமளிக்காதவர்கள் விடுமுறை பதிய வேண்டும்


(கொழும்பு)

புதிய சுற்றுநிருபத்தின்படி பாடசாலைகளுக்கு சமூகமளிக்கும் ஆசிரியர்கள் ஒப்பமிட வேண்டும் என்றும் பாடசாலைக்கு சமூகமளிக்காத ஆசிரியர்கள் வழமையான ஒழுங்கில் விடுமுறை பதிய வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

புதிதாக வெளியான சுற்றுநிருபத்திலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், அதிபர்கள் கட்டாயம் பாடசாலைக்கு வருகை தரவேண்டும் என அண்மையில் அரசாங்கம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-03)

# மரண அறிவித்தல்



## நடராசா துரைராசா

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் சிறுவிளான், கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட நடராசா துரைராசா நேற்று (04.08.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (அவுஸ்திரேலியா), தார்வேந்திரா (அஸ்பெற்றா நிறுவனம் - கொழும்பு), கேதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கே. அத்திலா (அவுஸ்திரேலியா), தா. மாலதி (நிர்வாக அலுவலர் - கொழும்பு), க. நித்தியானந்தன் (அதிபர் - யா/ கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் நிரோசா, அகிர்த், டிக்னேஸ், ஜனுஷ், சஞ்சீவன், நிதுஜனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.08.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மாலை 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 077 604 8879 021 223 1226 தகவல் குடும்பத்தினர்

# தன்னிச்சையாக செயற்பட்டால் சர்வதேச நாடுகளின் நேரடி அழுத்தத்தை எதிர்கொள்ளவேண்டும்

## எதிர்க்கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இவ்விடயத்தில் தன்னிச்சையாக செயற்பட முற்பட்டால் நாடு என்ற ரீதியில் சர்வதேச மட்டத்தில் நேரடியான அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.

எனவே, செப்டெம்பரில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் இப்போதிலிருந்தே அரசாங்கம் அவதானத்தை செலுத்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாயின், ஓரளவேனும் அதன்மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்ள முடியும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச மட்டத்தில் இலங்கை மீதான நற்பெயர் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை நீக்கப்பட்டாலும் நீக்கப்படாவிட்டாலும் எவ்வித சிக்கலும் இல்லை என்று சிலர் கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் சர்வதேசத்திடமிருந்து கிடைக்கக்கூடிய சகல சலுகைகளையும் பெற்றுக்கொள்வதற்கே நாம் முயற்சிக்க வேண்டும். எனினும் தற்போதைய அரசாங்கம் எமக்குள்ள சலுகைகளையும் இல்லாமலாக்கிக் கொண்டிருக்கிறது என்றார். (ம-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான டெல்டா வைரஸ் திரிபு

# இலங்கைக்கு பேரழிவு ஏற்படுத்தும்

## சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**ஆபத்தான டெல்டா திரிபு வைரஸ் கட்டுப்பாட்டை மீறி இலங்கையில் பரவும் அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ள சுகாதார நிபுணர்கள், வரும் வாரங்களில் இலங்கை மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளனர்.**

மேல் மாகாணம் முழுவதும் உள்ள மருத்துவமனைகள் அவற்றின் உச்சபட்ச பராமரிப்புத் திறன் விளிம்பில் உள்ளன.

தற்போது மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் தொற்று நோயாளிகளில் மூன்றில் இருவர் தீவிர சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்டு ஒட்சிசன் தேவைப்படுவோராக உள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை கொரோனா கிசிச்சை பிரிவுகள் முழுமையாக நிரம்பி விட்டன.

தற்போது சிகிச்சைக்கு வரும் பொரும்பாலானோர் டெல்டா திரிபால் பாதிக்கப்பட்டவர்கள் என்றே நாங்கள் சந்தேகிக்கிறோம்.

இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் ஒரு மாதத்தில் இலங்கை பேரழிவுகளைச் சந்திக்கும்

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதால் டெல்டா பரவல் சிவப்பு மையமான மேல் மாகாணத்தில் இருந்து பிற மாகாணங்களுக்கும் டெல்டா வேகமாகப் பரபும் அபாயம் உள்ளதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். இது நாடு முழுவதும் பேரழிவுகள் ஏற்பட வழிவகுக்கும்.

தற்போது நிலைமை மோசமடைந்து வருவதால் எதிர்வரும் வாரங்கள் மற்றும் மாதங்களில் தொற்று நோய் மேலும் தீவிரமாகும். மரணங்கள் சடுதியாக அதிகரிக்கும்

இந்நிலையில் மக்கள் தளர்வான முகக்கவசங்களைத் தவிர்த்து மூக்கு மற்றும் வாயை இறுக்கமாக மூடக்கூடிய முகக் கவசங்களை அணிய வேண்டும்.

மூடப்பட்ட இடங்களில் ஒன்று கூடுவதைத் தவிர்க்க வேண்டும். அவ்வாறான இடங்களில் முகக்கவசங்களை அகற்ற வேண்டாம்.

தண்ணீர் அருந்தக்கூட அவ்வாறான இடங்களில் முகக் கவசங்களை அகற்றாமல் வெளியே செல்ல வேண்டும் என்வும் மருத்துவ நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

அத்துடன், முடிந்தவரை வெளியே செல்வதையும் ஒன்று கூடுவதையும் தவிர்க்குமாறும் அவர்கள் அறிவுறுத்துகின்றனர். (நி-5)

# தேவை ஏற்பட்டால் முடக்கம் அமுல்படுத்தப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தேவை ஏற்பட்டால் முடக்கம் அமுல்படுத்தப்படும்என அரசாங்கம் அறிவித்துள்ளது. தேவைகளின் அடிப்படையில் எந்த முடிவும் எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கையின் சில பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவது குறித்து நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பராளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேரத்ன, பொது மக்களை வைரஸிலிருந்து பாதுகாக்க அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

அத்தோடு, மாத்தளை-ரத்தோட்டையில் வைரஸ் பரவி வருவதாகவும் இதன் விளைவாக ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, தேவைகளின் அடிப்படையில் எந்த முடிவும் எடுக்கப்படும் என்றும் தேவை ஏற்பட் டால் முடக்கம் அமுல்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். (நி-5)

# இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் பாடசாலைகள் திறக்கப்படும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் நாட்டில் பாடசாலைகள் திறக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றில் வைத்து நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.


இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து ஆசிரியர்களுக்கும் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை செலுத்திய பின் பாடசாலைகளைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதன்படி இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் பாடசாலைகள் திறக்கப்படும்.

80 சதவீதமான ஆசிரியர்களுக்கு தற்போது முலாவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)




யாழ்ப்பாண பல்கலைக்கழகம் முன்பாக நேற்று மதியம் அமைதிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இலவச கல்வித்துறையை பாதுகாக்கவும் விரிவுபடுத்தவும் கல்வித்துறையில் இராணுவ தலையீடுகளை தடுக்க வேண்டியும் கல்வியை தனியார் மயப்படுத்தல், கல்வி நடவடிக்கையில் அரச தலையீடுகள் என்பவற்றை நிறுத்தக் கோரியும் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்:-சிவசாந்தன், ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## சபைநிதி வேலைத்திட்டம் 2021 - கட்டம் III

01.தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.

02.தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்விகோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020(i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய,04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016(iii)ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03.இல 1-11 வரையான கேள்விகளுக்கு கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் ,அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். இல 12 & 13கேள்விகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனதாரராகக் காணப்படவேண்டும்.

04.தேவையான த்கைமைகள் ,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

05.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் **05.08.2021**தொடக்கம் **18.08.2021**ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியீல் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து **05.08.2021** திகதியிலிருந்து **18.08.2021**ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரிநீங்கலாக) இனை செலுத்திபெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07.பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு **19.08.2021**ம் திகதி மு.ப 9.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர் ,பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை ,சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08.கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09.கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம் ஒப்பந்தஇலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்துகேள்விசெல்லுபடியாகும்காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 1 | யாதம்பு வீதி, இலங்கையர்கோன் 2ம்குறுக்கு வீதி, சரஸ்வதிசனசமூக நிலையவீதி ஏழாலை NP/14/41/15/02(05)/CF/2021/22 | 1.058 | 60 நாட்கள் | | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 2 | சமாதி கோவில் வீதி (மிகுதி வேலை), பலாலி வீதி ஞானவைரவர் கோவில் முன் வீதி,புன்னாலைக்கட்டுவன், கலாசாரவீதி,மயிலங்காடு NP/14/41/15/02(05)/CF/2021/23 | 0.823 | 60 நாட்கள் | | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 3 | சட்டத்தரணி செல்லத்துரை வீதி– சுன்னாகம் NP/14/41/15/02(05)/CF/2021/24 | 0.870 | 60 நாட்கள் | | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 4 | பருத்திகலட்டிவீதி (மிகுதிவேலை) – சுன்னாகம் NP/14/41/15/02(05)/CF/2021/25 | 1.383 | 60 நாட்கள் | | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 5 | காட்டுப்புலம் மயான குறுக்கு வீதி– கந்தரோடை,உதயசூரியன் குறுக்கு வீதி மற்றும் சோமாரந்தோட்ட வீதி–உடுவில் NP/14/41/15/02(05)/CF/2021/26 | 0.981 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 6 | பழைய பொலிஸ் நிலைய மில் வீதி– சுன்னாகம் NP/14/41/15/02(05)/CF/2021/27 | 0.956 | 60 நாட்கள் | | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 7 | தியேட்டர் வீதி மிகுதிவேலை - இணுவில் NP/14/41/15/02(05)/CF/2021/29 | 1.871 | 60 நாட்கள் | | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 8 | மட்டக்கச்சி 2ம் குறுக்குவீதி, சத்தியபுரம் சேச் முன் வீதி–உடுவில், சிங்கத்தின் கலட்டி கிளை வீதி இணுவில் NP/14/41/15/02(05)/CF/2021/30 | 1.265 | 60 நாட்கள் | | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 10 | காளிகோவில் வீதி மிகுதி தாவடி NP/14/41/15/02(05)/CF/2021/31 | 1.48 | 60 நாட்கள் | | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 11 | Floor Rendering work Vehicle Set at ValisouthPradeshiya Sabha Head office Chunnakam.NP/14/41/15/02(05)/CF/2021/32 | 0.593 | 60 நாட்கள் | C9& C8 கட்டடப் புனரமைப்பு | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |
| 12 | Supply and Installation of Laptop computers NP/14/41/15/03/CF/Laptop/2021 | 0.408 | 60 நாட்கள் | | 63 நாட்கள் | 21.102021 | 11,000.00 | 18.11.2021 |
| 13 | Supply and Installation of Desktop Computers NP/14/41/15/03/CF/Desktop/2021 | 0.700 | 60 நாட்கள் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 63 நாட்கள் | 21.10.2021 | 11,000.00 | 18.11.2021 |

10.கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 13.08.2021ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

க.தர்ஷன்,
தவிசாளர், பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,சுன்னாகம்.
05.08.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C-2465)

# உரம் இறக்குமதிக்கான தடை நீக்கம்

## மகிழ்ச்சியில் விவசாயிகள்

(கொழும்பு)

**நாட்டில் இரசாயன உரம் இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை நீக்க அறிவிப்பு அடங்கிய கடிதத்தை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கையொப்பமிட்டு வங்கிகளின் பிரதானி களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.**

இரசாயன உரம் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை எக்காரணத்தைக் கொண்டும் மீளப்பெறப்படாது என பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் அறிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த சேதனப் பசளை திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக அவர் கூறியிருந்தார். எனினும் திடீரென இரசாயன உரம் இறக்குமதி தடை விதிக்கப்பட்டதால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கினர். விவசாயிகளின் பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

இருந்தபோதும் இரசாயன உரம் இறக்குமதிக்கான தடை மீளப்பெறப் படாது என உறுதியாகக் கூறிய அரசாங்கம் தற்போது தன்னுடைய நிலைப் பாட்டில் இருந்து மாறி இரசாயன உரம் இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அளித்துள்ளது.

அதன்படி ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இரசாயன உரம் இறக்குமதி செய்யக்கூடிய அளவிலான ஏற்பாடு களை நிதி அமைச்சு முன்னெடுத்துள்ளது. (நி-5)

# வடமாகாணத்தில் பண்ணைகளை படையினரே நடத்துகின்றனர்

## பாராளுமன்றில் சமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பல விவசாயப் பண்ணைகளை சிவில் பாதுகாப்பு படையணி நடத்தி வருவது உண்மையே. நாட்டுக்கு தேவையான உணவுகளை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும் என சபையில் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளம் பிரதேசத்தில் உள்ள நூறு ஏக்கர் நிலப்பரப்பில் இலங்கை இராணுவம் விவசாய பண்ணைகளை நடத்தி புனர் வாழ்வுக்குட்படுத்தப்பட்ட முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது.

வடக்கு மாகாணத்தில் சிவில் பாதுகாப்புப் படைகளின் கீழ் இயங்கும் விவசாய பண்ணைகள் குறித்து பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-5)


## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு சம்பியன் லேனில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு

077 968 9119

(7559)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர். திரு. பொன்னையா வசந்தநாதன்



கடந்த 06.07.2021
செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எங்கள்
அன்புத் தெய்வம்
அமரர். திரு. பொன்னையா
வசந்தநாதன்
அவர்களின் அந்தியேட்டிக்
கிரியைகள் 05.08.2021 இன்று
வியாழக்கிழமை 9.00 மணியளவில்
கீரிமலை புனித
தீர்த்தக்கரையில் நடைபெற்று
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
நணபகல் 12.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அன்பின் உருவாகி எம்மை அன்பால் அரவணைத்த தெய்வமே
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டித் துதிக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

(7547)

குடும்பத்தினர்
077 524 6657

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் திருமதி

## பூவையா பங்கயம்



**பிறப்பு: 28.12.1945 இறப்பு:11.07.2021**

**திதி: ஆனிமாத பூர்வபக்க துதியை**

கடந்த 11.07.2021 அன்று இறைபதம் எய்திய
எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள்
06.08.2021 நாளை வெள்ளிக்கிழமை வில்லூன்றி
புனித தீர்த்தக் கரையில் நடைபெறும்.
தொடர்ந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்
மதியபோசன நிகழ்வும் எதிர்வரும்
10.08.2021 செவ்வாய்க்கிழமை
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் சுகாதார விதி நடைமுறைப்படி
நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவருக்கும்
அறியத் தருகின்றோம்.

எமது குடும்பத் தலைவியை நாம் இழந்து நின்றபோது சகல
வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்.

(7551)

236/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிலும் டெல்டா பரவும் அபாயம்

# பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழில் டெல்டா வைரஸ் பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாகக் காணப்படுவதால் மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டுமென யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.**

தற்போது யாழ்.மாவட்ட கொரோனா நிலைமைகள் தொடர்பில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ். மாவட்டத்தில் தற்பொழுது கொரோனாத் தொற்று நிலைமையானது சற்று தீவிரம் பெற்று காணப்படுகின்றது.

137 கொரோனா இறப்புகள் இன்றுவரை யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. அந்தவகையில் 2,445 குடும்பங்களைச் சேர்ந்த 6,969 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். வேலணை, பருத்தித்துறை பிரதேசத்தில் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இந்த நிலைமையில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

தற்போது ஆலய வழிபாடுகள் ஊடாக மக்கள் ஒன்று சேர்வது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் சுகாதாரக் கட்டுப்பாடுகளை மதித்து தங்களுடைய குடும்பத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல் ஆலய நிர்வாகிகளும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலைமையில் 100 பேருக்கு உட்பட்டவர்களின் பங்கு பற்றுதலோடு உள்வீதி வலம் வர மாத்திரமே ஆலயங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை மதித்து நடந்துகொள்ள வேண்டும்.

மேலும் தடுப்பூசியை 30 வயதுக்கு மேற்பட்டோர் எடுப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அது தேவையானதொன்று. இது சட்டத்தில்நடைமுறைப்படுத்தப்படா விட்டாலும் சமூகத்தினுடைய பாதுகாப்புக் கருதி அது கட்டாய தேவையாக கருதப்படுகிறது.

தடுப்பூசி அட்டையானது இனிமேல் சில அரச திணைக்களங்கள் அதேபோல வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய பொது இடங்கள், சுப்பர் மார்க்கெட்டுகள், பொதுச்சந்தைகள், பொது சேவைகளை பெறுவதற்கும் பேருந்துகளில் பயணிப்பதற்கும் கூட தடுப்பூசி அட்டையினை காண்பித்து தான் யாழ்ப்பாண மாவட்டத்தில் பயணிக்க முடியும்.

எனவே தடுப்பூசியினை பெற்றுக்கொண்டு அதற்கு அடையாளமாக விளங்குகின்ற அட்டையை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

யாழில் டெல்டா வைரஸ் பரவக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே பொதுமக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5-33)

## பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துமாறு யாழ்.மாநகர முதல்வரிடம் மகஜர் கையளிப்பு



யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட உணவகங்களில் லஞ்சீற் மற்றும் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணனிடம் 'அறம்' அமைப்பினர் மகஜர் ஒன்றினை நேற்றைய தினம் கையளித்தனர்.

யாழ். மாவட்டத்தை சேர்ந்த சமயத் தலைவர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தினர், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலதரப்பட்ட 500 பேரைக்கொண்ட மக்களிடம் பெறப்பட்ட கையெழுத்து கோப்பு மற்றும் குறித்த விடயம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கையும் மாநகர முதல்வர் மணிவண்ணனிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது இத்திட்டத்தை உடனடியாக அமுல்படுத்துவதிலிருக்கும் சவால்கள் மற்றும் மாற்று நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் விரைவில் அவற்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாநகர முதல்வர் தெரிவித்தார்.(4-5-33)

## யாழ்.போதனாவில் அனைத்து வகை இரத்தங்களுக்கும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் சகல வகை இரத்தத்திற்கும் தட்டுப் பாடு நிலவுவதாக இரத்த வங்கி அறிவித்துள்ளது.

ஏற்கனவே இரத்தம் வழங்கி 4 மாதங்கள் பூர்த்தியானவர்கள் , கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டு ஒரு வார காலத்திற்கு மேற்பட்டவர்கள் இரத்தம் வழங்க முடியும் என தெரிவித்துள்ளனர்.

மேலதிக தகவல்களுக்கு 077 210 5375 எனும்தொலைபேசி இலக்கத்துடன் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கியினர் அறிவித்துள்ளனர். (4-5-33)

## ஓவியப்போட்டி

(சாவகச்சேரி)

ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நாடளாவிய ரீதியாக மாணவர்கள் மத்தியில் ஓவியத்திறன் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஓவியப்போட்டி நடத்தப்படவுள்ளது.

தேசிய மட்டத்தில் உள்ள ஆரம்ப பிரிவு, கனிஷ்ட பிரிவு, கனிஷ்ட இடைநிலைப் பிரிவு, உயர்தரப் பிரிவு மற்றும் பல்கலைக்கழக/ ஏனைய மாணவர்கள் குறித்த ஓவியப்போட்டியில் பங்கு பற்ற முடியும். ஓவியங்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி ஓகஸ்ட் 20 என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஓவியப் போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை தேவாலய வீதி சாவகச்சேரி எனும் முகவரியில் அமைந்துள்ள ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

அல்லது. 077 356 0799 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளனர். (4-5-30)

## 2021 ஆசிரிய கலாசாலைகளுக்கான அனுமதி இம்மாத இறுதியில்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதிலும் உள்ள ஆசிரிய கலாசாலைகளில் 2019 - 2020 கற்கை ஆண்டில் கல்வியைத் தொடரும் ஆசிரிய பயிலுநர்களுக்கான கற்கைநெறி எதிர்வரும் செப்டெம்பர் 8 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரவுள்ளது.

இதன்படி கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து 380 ஆசிரிய மாணவர்கள் கற்கையைப் பூர்த்தி செய்து வெளியேறவுள்ளதாக கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தெரிவித்தார்.

இவர்களுக்காக பரீட்சைத் திணைக்களம் நடத்தும் பரீட்சைகள் செப்டெம்பர் மாத நடுப்பகுதியிலும் தேசிய கல்வி நிறுவகம் நடத்தும் பரீட்சைகள் ஒக்டோபர் மாத முற்பகுதியிலும் நடைபெற ஏற்பாடாகிறது.

2018 - 2019 கல்வியாண்டுக்குரிய பரீட்சை நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் இருந்த நிலையில் கொவிட் நிலைமை காரணமாக அந்தப் பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டது.

அந்தப் பரீட்சையும் 2019 - 2020 அணியினருடன் செப்டெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை 2021 கல்வியாண்டுக்கான ஆசிரிய கலாசாலைகளுக்கான அனுமதி தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் ஓகஸ்ட் மாத நிறைவில் நடைபெறவுள்ளன என்றும் இவர்களுக்குரிய கற்கை நெறிகள் செப்டெம்பரில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார். (4-5)




## பட்டச்சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

2019 ஆம் கல்வியாண்டில் முழுமையாக் கற்கைநெறியினை பூர்த்தி செய்த சகல கற்கை நெறிகள் சார்ந்த மாணவர்கள் அனைவரும் 05.09.2021 இற்கு முன் அலுவலகத்தினை நேரடியாக தொடர்பு கொண்டு உரிய ஆவணத்தை பெற்று குறித்த காலக்கிரமத்தில் பட்டச்சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியலாளர் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடில்லை

# தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்த வேண்டாம்

(கொழும்பு)

**நாட்டுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருள் இறக்குமதிக்கு தேவையான அந்நியச் செலாவணி இருப்பு அரசாங்கத்திடமுள்ளது. எனவே இது தொடர்பில் அநாவசிய சிக்கலை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் பால்மா பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை.பால்மா பற்றாக்குறை தொடர்பில் தெரிவிக்கப்படவில்லை. பற்றாக்குறை ஏற்படும் என்று நாம் கருதவில்லை.

எதிர்வரும் காலங்களில் இலங்கையில் உள்நாட்டு பால்மா உற்பத்தியை அதிகரித்து விநியோகிப்பதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தியாவசிய உணவு பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பில் சிக்கலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை கிடையாது என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

நாட்டில் இறக்குமதிக்காக மாதாந்தம் 50 மில்லியன் டொலர் நிதி செலவிடப்படுகிறது. எரிபொருள் இறக்கும்திக்காகவும் 200 மில்லியன் டொலர் செலவிடப்படுகிறது.

நாட்டில் அந்நியச் செலாவணி தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளமை அனைவரும் அறிந்த காரணியாகும். இருந்தபோதிலும் கடந்த மாதம் செலுத்தப்பட வேண்டியிருந்த ஒரு பில்லியன் டொலர் கடன் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

அதன்பின்னர் ஒழுங்குமுறைக்கமைய அந்நியச் செலாவணி இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கும், டொலர் வருமானத்தை ஈட்டுவதற்கான வேலைத் திட்டங்களிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அதற்கமைய நாட்டுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருள் என்பவற்றை இறக்குமதி செய்வதற்கான போதிய அந்நியச் செலாவணி இருப்பு அரசாங்கத்திடம் காணப்படுகிறது. எனவே இது தொடர்பில் சிக்கலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை கிடையாது என்றும் தெரிவித்தார். (நி-5)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
1936 ❖ 03 ❖ 27



மறைவு
2021 ❖ 08 ❖ 02

**அமரர். சுப்பிரமணியம் அன்னலட்சுமி**

**இனிய வாழ்வு இல்லத்தின் இனிய நல்ல பிள்ளைகளை**
**கனிவுடன் உதவியீர்ந்த மனித மாணிக்கம் நாதனின் அம்மா**
**புனிதமான அன்னலட்சுமி அவர்கள் புண்ணிய உலகு சென்றறிந்து**
**பனித்து நிற்கிறோம் கண்ணீரை பாவையரே சென்று வருக!!!**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

(C-2464)

**இனியவாழ்வு இல்லம், பணிப்பாளர் சபை,**
**முகாமைத்தொகுதி, ஊழியர்கள், பிள்ளைகள்.**

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனியாகப் போட்டியிட்டு ஆட்சியமைக்கும்-மைத்திரி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உரிய நேரத்தில் தனியாக போட்டியிட்டு ஆட்சி அமைக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை.


அரசாங்கம் உரிய முறையில் ஒன்றும் நிறைவேற்றாமையினால் மக்கள் தற்போது வெறுப்படைந்துள்ளனர்.

பாரிய பின்னடைவை கண்டுள்ள சுதந்திரக்கட்சியை வலுப்படுத்தினால் மீள எழுவது கடினமான விடயம் அல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# மரண அறிவித்தல்

## திரு. கணபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை

**(உரிமையாளர், நாவலர் புத்தகசாலை, மந்திகை, முன்னாள் முகாமையாளர் Marketing Department)**



பிறப்பு: 05.11.1949
இறப்பு: 03.08.2021

நறுவிலடி, புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிலத்தப்பை புலோலி தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கணபதிப்பிள்ளை- வீரகத்திப்பிள்ளை அவர்கள் கடந்த 03.08.2021 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா- தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும் சிறீஸ்கந்தா (லண்டன்), பிரேமகுமாரன் (முகாமைத்துவ உதவியாளர் சுமநல சேவை நிலையம், நல்லூர்), உதயசூரியா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுகந்தாயினி (லண்டன்), மதுராந்தகி (முன்பள்ளி ஆசிரியர், கந்தமுருகேசனார் முன்பள்ளி, புலோலி தென்மேற்கு), மயூரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், விக்கினேஸ்வரராசா அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், விஜயலட்சுமி மற்றும் பாலச்சந்திரன் (லண்டன்), சகுந்தலை ஆகியோரின் மைத்துனரும், நடராசா, தங்கம்மா, சகுந்தலா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், ஸ்ரீயா, ஜதுர்ஷன், மதுஷன், கீர்த்துயன் ஆகியோரின் அன்புப் பேரனும், அரவிந்தன் (லண்டன்), சிவரூபராசா, நிருஷா (லண்டன்), சர்மி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையாரும், கலைவாணி (சுவிஸ்), குகதாசன் (லண்டன்), சோதிரூபன் (பிரதேச செயலகம், பருத்தித்துறை), ஜெயானந்தன் (லண்டன்), பவானி (அவுஸ்திரேலியா), பவானந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சிறிய தந்தையாரும், மயூரன், சுபா (கனடா), பாலசங்கர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (09.08.2021) அன்று காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| பிலத்தப்பை | 021 226 3635 | தகவல்: |
| புலோலி தென்மேற்கு | 077 634 3982 | குடும்பத்தினர் |

# ஆசிரியர்களால் மூன்று மாதங்கள் பொறுத்துக்கொள்ள முடியாதா?

# கல்வி அமைச்சர் கேள்வி

(கொழும்பு)

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை உடனடியாக நீக்குவதற்கு தற்போது முடியாது. அவ்வாறு ஆசியர்களுக்கு மாத்திரம் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டால் ஒட்டுமொத்த அரச துறையிலும் பாரிய சிக்கல் ஏற்படும். அதனால்தான் வரவு-செலவு திட்டத்தில் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக தெரிவித்திருக்கிறோம்.

3 மாதங்களில் வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது. என்றாலும் ஆசிரியர்கள் 3 மாதங்களுக்கு பொறுத்திருக்க முடியாமல் மாணவர்களது கல்வியை பணயமாக வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவினால் கேட்கப்பட்ட அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு, கொவிட் வேகமாக பரவும் அபாயம் இருக்கும் நிலையில் அவர்களை பாடசாலைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருப்பது போன்ற கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாத் தளமாக மாறும் கிளிநொச்சிக் குளம்

(முறிகண்டி)

**கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள கிளிநொச்சிக் குளத்தினை அபிவிருத்தி செய்து, அதனை சுற்றுலாத் தளமாக அமைப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.**



அந்த வகையில் குறித்த குளத்தினை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்து பொழுது போக்கு மையமாக மாற்றும் வகையில் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. நடைப் பயிற்சிக்கான வலையம், சிறுவர் பூங்கா, நீரில் பயணிக்கும் வகையிலான வசதி, பொழுது போக்கு வசதிகள், மின்னொளியூட்டல், வர்த்தக வசதிகள் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான திட்டமிடல் ஒன்று இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர் செந்தூரனால் நேற்று குறித்த குளத்தை பார்வையிட வந்த குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த திட்டமிடல் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. முதல் கட்ட பணிகளுக்கு ரூபாய் 11 கோடி செலவு தொகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த திட்டமானது பல்வேறு அமைப்புக்கள், கல்வியியலாளர்கள், சமூகங்களால் முன்மொழியப்பட்ட விடயம் என்பதாலும் மாவட்டத்திற்கான பிரதான பொழுதுபோக்கு மையமாகவும் பொருளாதாரத்தை ஈட்ட வல்ல திட்டம் என்பதாலும் அதனை விரைவாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க சிவில் அமைப்புக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (4-5-100)



நாடளாவிய ரீதியில் கொரோன கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மக்கள் மற்றும் அதிகாரிகளின் சுகாதார நிலையைக் கருத்தில் கொண்டு தேசிய சமாதான பேரவை மற்றும் தொடர்பாடலுக்கான நிலையம் இணைந்து ஒரு தொகுதி சுகாதாரப் பொருட்களை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். (படம்:-ஜோசப் நயன்)

# காணி மத்தியஸ்தர்சபை செயற்பாடுகள் மீள ஆரம்பம்

(குருமன்காடு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படும் என சபையின் தவிசாளர் இ.நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

தற்போது கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதையடுத்து அரசாங்கத்தின் ஆலோசனைக்கு அமைவாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி காணி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுகின்றன.

அதன்படி எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியில் இருந்து ஒரு மணி வரை வவுனியா, குடியிருப்பு இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் அதன் செயற்பாடுகள் ஆரம்பமாகும் எனவும் தெரிவித்தார். (4-5-250)

# மோட்டார் சைக்கிள் விபத்து; பயணித்தவர் படுகாயம்



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதுக்காட்டுச் சந்தி பகுதியில் கிளிநொச்சி நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகே உள்ள பெயர்ப் பலகையுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

குறித்த விபத்து நேற்று காலை புதுக்காட்டுச்சந்தி ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் அம்புலன்ஸ் வண்டி மூலம் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (4-100-316)




# சட்டவிரோத மணல் அகழ்வு ஆபத்தில் அல்லிப்பளை கிராமம்

(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட அல்லிப்பளை கிராமம் சட்டவிரோத மணல் அகழ்வுகளால் அழிவடையும் அபாய நிலையில் உள்ளதாக விவசாய அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அல்லிப்பளை கிராமத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறித்த பிரதேசத்தில் மிக ஆழமான குழிகள் வெட்டப்பட்டு மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகிறன. இதனால் கடல்நீர் உட்புகும் அபாயநிலை காணப்படுகிறது.

குறிப்பாக இந்தப் பிரதேசங்களில் காணப்படுகின்ற வயல் நிலங்கள், தோட்ட செய்கை நிலங்கள், தனியார் காணிகள் என்பவற்றில் நாளாந்தம் சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த விடயங்கள் தொடர்பில் பொலிஸாருக்கும் பிரதேச செயலகத்துக்கும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வால் தமது கிராமம் பாரிய அளவில் பாதிக்கப்படுவதாகவும் தெரிந்ததுடன் தமது கிராமத்தைப் பாதுகாக்க பிரதேச மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)

# வவுனியா வைத்தியசாலையிலும் ஒட்சிசன் பாவனை அதிகரிப்பு

## மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைமுறையில் உள்ள பார்வையாளர்களுக்கான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதுடன் கொரோனாத் தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ள அனைவரும் முன்வர வேண்டுமென வைத்தியசாலை பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மீண்டும் கொரோனா நோய்த்தாக்கம் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருவதுடன் ஒட்சிசன் தேவையான நோயாளர்களும் அதிகரித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்திலும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதுடன் மாவட்ட பொதுவைத்தியசாலையில் ஒட்சிசன்பாவனையளவும் பாரிய அளவில் அதிகரித்துள்ளது.

மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாது சுகாதார நடைமுறைகளை இடைவிடாது பின்பற்றுவது தங்களையும் தமது மாவட்டத்தையும் பாதுகாப்பானதாக வைத்திருக்க இன்றியமையாததாகும்.

சுகாதாரத் துறையினரது அயராத முயற்சியுடன் மக்களினது அர்ப்பணிப்பான ஒத்துழைப்புமே, கடுமையன இந்த நிலைமையிலிருந்த முழு நாட்டினையும் வெளிக் கொணர வல்ல நடைமுறையாகுமெனவும் தெரிவித்தார். (4-5-299)



கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு திரை மற்றும் கிருமித் தொற்று நீக்கும் இயந்திரங்கள் மற்றும் ஒட்சிசன் செறிவூட்டிகள் அமெரிக்க யூத உலக சேவை நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பயன்பாட்டிற்காக நேற்றைய தினம் கையளிக்கப்பட்டன. படம்:-(தேவானந்தன், ஜோசப் நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

05.08.2021
ஆடி 20, வியாழக்கிழமை
துவாதசி பிற்பகல் 5.27 மணிவரை
திருவாதிரை முழுவதும்
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
சந்திராஷ்டமம்- கேட்டை

வளவன்


மேஷம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுபகாரியச் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.


மிதுனம்

மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், ஒருவகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.


கடகம்

மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.


சிம்மம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானத்தை அதிகரிக்கும் வழிவகை செய்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


கன்னி

புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காணமுற்படுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, உறவினர்களின் உதவிகள் கிடைக்கலாம்.


துலாம்

தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.


விருச்சிகம்

அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை, வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள்.


தனுசு

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறை வேறும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.


மகரம்

உடல் ஆரோக்கியம் சீராகும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.


மீனம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

நல்லவனாக இருந்தால் மட்டும் வெற்றி கிடைப்பதில்லை. வல்லவனாகவும் விளங்க வேண்டும்.

# காங்கேசன்துறை- அநுராதபுரம் இடையே இரண்டு மேலதிக ரயில் சேவைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை- அநுராதபுரம் இடையே தினமும் இரண்டு தொடருந்து சேவைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் ரயில் நிலைய பிரதான அதிபர் ரி.பிரதீபன் அறிவித்துள்ளார்.

தற்போது தினமும் காலை 5.15 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து சேவையை ஆரம்பிக்கும் தொடருந்து காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்டு, நாவற்குழி, கொடிகாமம் நிலையங்களில் தரித்து கிளிநொச்சி புகையிரத நிலையத்தைச் சென்றடையும்.

காலை 6.53 மணிக்கு கிளிநொச்சியிலிருந்தும் காலை 7.22 மணிக்கு மாங்குளத்திலிருந்தும் புறப்படும் தொடருந்து காலை 8.21 மணிக்கு வவுனியா புகையிரத நிலையத்தைச் சென்றடையும்.

அதே தொடருந்து மாலை 3.45 மணிக்கு அநுராதபுரத்திலிருந்து சேவையை ஆரம்பித்து வவுனியாவிலிருந்து மாலை 5 மணிக்குப் புறப்படும். யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை இரவு 7.12 மணிக்கும் காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை இரவு 7.48 மணிக்கும் வந்தடையும்.

இந்தச் சேவைக்கு மேலதிகமாக நேற்று ஆரம்பிக்கப்பட்ட சேவை காங்கேசன்துறையிலிருந்து மாலை 4.15 மணிக்கு சேவையை ஆரம்பிக்கும் தொடருந்து மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும். கிளிநொச்சியிலிருந்து மாலை 5.51 மணிக்கும் வவுனியாவிலிருந்து 7.03 மணிக்கும் புறப்பட்டு அநுராதபுரத்தை இரவு 8 மணிக்குச் சென்றடையும்.

அத்துடன், தினமும் அதிகாலை 5 மணிக்கு அநுராதபுரம் புகையிரத நிலையத்திலிருந்து சேவையை ஆரம்பிக்கும் தொடருந்து வவுனியாவிலிருந்து அதிகாலை 5.55 மணிக்கும் கிளிநொச்சியிருந்து 6.51 மணிக்கும் புறப்பட்டு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை காலை 8.02 மணிக்கும் காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை காலை 8.32 மணிக்கும் வந்தடையும் எனவும் தெரிவித்தார். (4-5-33)

# சம்பள முரண்பாடுக்கு தீர்வுகோரி யாழில் வாகனப் பேரணி

(குப்பிழான்)

இலவசக் கல்விக்கான நெருக்கடிகள் மற்றும் 24 வருட ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு கோரி எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் வாகனப் பேரணி இடம்பெறவுள்ளது.

யாழ். நகரில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டப வாயிலிலிருந்து யாழ்.கச்சேரி வரை குறித்த வாகனப் பேரணி இடம்பெறவுள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்படி தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-5-18)

# வில்லூன்றியில் ஆடி அமாவாசை

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசை நடைபெற்று காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தீர்த்தவாரியும் நடைபெறும். காலை 8 மணி முதல் பொது மக்கள் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் அமாவாசை தீர்த்த சங்கல்பம் செய்து சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கமைய தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என ஆலய தர்மகர்த்தா பேராசிரியர் இ.குமாரவடிவேல் அறிவித்துள்ளார். (4-6)

# பூநகரியில் மூன்று வீதிகள் புனரமைப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரியில் மூன்று வீதிகள் நிரந்தர வீதிகளாக புனரமைக்கப்படவுள்ளதாக பூநகரிப் பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பூநகரிப் பிரதேச சபைக்கு உட்பட்ட முழங்காவில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள மூன்று வீதிகள் நிரந்தர வீதிகளாக அமைக்கப்படவுள்ளன.

நீண்ட நாட்களாக இப்பகுதி மக்கள் இவ் வீதிகளை திருத்தம் செய்யுமாறு கோரிக்கை விடுத்து வந்தனர். இதன் அடிப்படையில் பிரதேச சபையின் அமர்வின் போது இவ் வீதிகளுக்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

மதிப்பீடுகள் நடைபெற்று தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-5-350)

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கண்ணிவெடி அகற்றிய காணிகள் விடுவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் ஏ-9 வீதியின் வடக்குப் பக்கமான இத்தாவில், முகமாலைப் பிரிவின் லக்ஸபான உயர் [illegible] [illegible] வாக விடுவிக்கப்பட இருப்பதனால் மீளக்குடியமரவரும் மக்கள், காணி உரிமையாளர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக திட்டமிடல் கிளையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

பதிவுகளின் போது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், அங்கத்தவர் எண்ணிக்கை, தற்போது வசிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணி உரிமைப்பத்திரம் என்பவற்றுடன் சமுகம் தருமாறும் தெரிவித்துள்ளார். (4-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பயங்கரவாத முகாம்கள் ஆப்கானுக்கு இடம்பெயர்வதால் இந்தியாவிற்கு பாதிப்பு

### டி.எஸ்.திருமூர்த்தி எச்சரிக்கை



(கொழும்பு)
உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானுக்கு பயங்கரவாத முகாம்கள் மீண்டும் இடம்பெயர்வதால் இந்தியாவுக்கு நேரடி பாதிப்பு ஏற்படும் என ஐ.நா.பாதுகாப்பு சபையின் ஓகஸ்ட் மாதத்திற்கான தலைவரும் இந்திய தூதருமான டி.எஸ்.திருமூர்த்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர், ஆப்கானில் பயங்கரவாத சக்திகளுக்கு சர்வதேச பயங்கரவாதத்துடன் உள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

பயங்கரவாத முகாம்கள் ஆப்கானிஸ்தானுக்கு மீண்டும் இடம்பெயரக் கூடாது என வலியுறுத்தியுள்ள அவர், இது இந்தியாவுக்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

இது தொடர்பில் அங்கு நடைபெறும் அமைதிப் பேச்சு வார்த்தையின் மூலம் பலன் கிடைக்கும் என நம்புகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## ஜம்மு- காஷ்மீரில் இதுவரை 664 முறை தாக்குதல்

### பாகிஸ்தான் மீது இந்தியா குற்றச்சாட்டு



(காஷ்மீர்)
ஜம்மு-காஷ்மீரின் எல்லைப் பகுதியில் இந்த வருடத்தின் ஜூன் மாதம் வரை பாகிஸ்தான் 664 முறை தாக்குதல் நடத்தியுள்ளதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் மக்களவையில் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 133 ஆக இருந்ததாகவும் நித்யானந்த ராய் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## ஜப்பானில் நிலநடுக்கம் சுனாமி அச்சுறுத்தல் இல்லை

(டோக்கியோ)
ஜப்பானில் உள்ள இப்ரகி மாகாணத்தின் கடற்கரை பகுதியில் நேற்று அதிகாலை 6.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

பூகம்பத்தின் மையப் பகுதி ஜப்பானின் கடற்கரையிலிருந்து 40 கி.மீ.அல்லது 25 மைல் ஆழத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்றும் உள்ளூர் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜப்பான் பூகம்பங்களுக்கு அந்நியமானதல்ல, ஏனெனில் நாடு மூன்று தகடுகளை ஒன்றிணைக்கும் டெக்டோனிக் தகடுகளுக்கு மேல் உள்ளது. டெக்டோனிக் தகடுகளில் ஒன்று மாறும்போது, நிலநடுக்கம் ஏற்படலாம்.

ஜப்பானிய அதிகாரிகள் குறிப்பாக டோக்கியோவின் ஒலிம்பிக் மைதானங்களை பூகம்பங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளைத் தாங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஒலிம்பிக் போட்டிகளின் கரப்பந்தாட்ட அரங்கில் "அதிர்ச்சியை உறிஞ்சும் மாபெரும் இறப்பர் மெத்தைகள் பொருத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேநேரத்தில் ஒலிம்பிக் கிராமம் கடல் சுவர்களால் பாதுகாக்கப்பட்டவை என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (நி-5)

## ஆறு மாத

## உலகெங்கு


**(ஜெனிவா) —**
**உலகம் முழுவது**
**கடந்துள்ளது. நேற்**
**2 இலட்சத்து 37 ஆ**

அத்துடன், நேற்றுக் காலை வரையான தரவுகளின்படி கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழுந்தவர்கள் எண்ணிக்கை 42 இலட்சத்து 58 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 18 கோடியே 5 இலட்சத்து 6 ஆயிரத்துக்கு

## ஆப்கான் த

## சக்தி வாய்ந்த கு



(காபூல்)
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை சக்தி

## ஜேர்மனியில் ஊரடங்கு அமுல் எதிர்த்து மக்கள் போராட்டம்

### 600 பேர் பொலிஸாரால் கைது

(பெர்லின்)
ஜேர்மனியில் கொரோனா பாதிப்புகளை முன்னிட்டு அரசு பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக கொரோனா தடுப்பூசி போடும் பணிகளைத் தீவிரப்படுத்தி வருகிறது. இதேபோல், ஊரடங்கு கட்டுப்பாடுகளும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 5 ஆயிரத்திற்கும் கூடுதலான போராட்டக்காரர்கள் தெருக்களில் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அவர்களைக் கலைந்து போகும்படி பொலிஸார் தெரிவித்தனர். எனினும், இரு தரப்பிலும் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதில், போராட்டம் நடத்தியவர்களில் 600 பேர் கைது செய்யப்பட்டனர். இதன்போது 10 பொலிஸார் காயமடைந்தனர் (நி-5)

## பேருந்து-பார

## 41 பேர் பலி, 33

## மாலியில் துயரம்

(மாலி)
பயணிகள் பேருந்து - கனரக பாரவூர்தி நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் 41 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் இந்த துயர சம்பவம் இடம்பெற்றது.

பாரம் ஏற்றிக் கொண்டு சென்ற கனரக பாரவூர்தியின் டயர் வெடித்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே சென்ற பேருந்தின் மீது மோதியதாக கூறப்படுகிறது.

இந்த பயங்கர விபத்தில் இரண்டு வாகனங்களும் உருக்குலைந்து காணப்படுகின்றன.

மேலும் விபத்தில் 41 பேர் உயிரிழந்ததாகவும் 33 பேர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

## கொரோனா தீவிரம்

# ...தங்களில் 10 கோடிப் பேருக்கு தொற்று

## ...தும் 20 கோடியை தாண்டிய தொற்றாளர்கள்

**...தும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 கோடியைக் ...ற்றுக் காலை வரையான தரவுகளின் பிரகாரம் ஒட்டுமொத்த தொற்று நோயாளர் தொகை 20 கோடியே ... ஆயிரத்தைக் கடந்துள்ளது.**



மேற்பட்டவர்கள் குணமடைந்துள்ளனர்.

உலகெங்கும் கடந்த ஆறு மாதங்களில் தொற்று நோயாளர்கள் தொகை 10 கோடியில் இருந்து 20 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த ஜன்வரி மாதத்தில் 10 கோடி தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இந்த எண்ணிக்கை வெறும் ஆறே மாதங்களில் இரட்டிப்பாகியுள்ளது.

உலகில் ஒட்டுமொத்த தொற்று நோயாளர்களில் 18 வீதமானவர்கள் அமெரிக்காவிலும் 15 வீதமானவர்கள் இந்தியாவிலும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ...தலைநகரில் ...குண்டு வெடிப்பு



வாய்ந்த குண்டுவெடிப்பு ஏற்பட்டது.

காபூலின் மையப்பகுதியில் வெடிகுண்டை பயன்படுத்தி இந்த தற்கொலை தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் அரசு கட்ட டங்கள், குடியிருப்புகள் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்கள் அமைந்துள்ளன.

தலிபான் தலைவர்கள், ஆப்கானிஸ்தானில் தங்கள் நிலைகள் மீது சமீபத்தில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதல்களுக்கு பதலடியாக தற்போதைய தாக்குதலை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

இதனிடையே ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானி திங்களன்று, தனது நாட்டில் வன்முறை மோசமடைவதற்கு அமெரிக்க படைகள் திடீரென வெளியேறுகின்றமையே காரணம் என்று குற்றம் சாட்டினார். (நி-5)

# வடகொரிய ஜனாதிபதிக்கு தலையில் காயம்

## வெளியான புகைப்படத்தால் பரபரப்பு

(பியாங்யாங்)

தலையின் பின் பகுதியில் பண்டேஜ் உடன் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் பொது நிகழ்ச்சியில் பங்கேற்ற புகைப்படம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலகின் மர்ம தேசமாக அறியப்படும் வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் பற்றிய எந்த தகவலும் வெளி உலகுக்கு உறுதியாக தெரிவது இல்லை. இதனால், அவரது உடல் நிலை குறித்து அடிக்கடி யூகங்கள் பரவும்.


இந்நிலையில், நேற்று முன்தினம் இவ்வாறான கிம் ஜாங் உன் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. அந்த புகைப்படம் ஜூலை மாத இறுதியில் எடுக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இராணுவ உயர் அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபடும் வகையில் இந்த புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

அவருக்கு உடல் ரீதியாக பிரச்சினைகள் இல்லை. நல்ல உடல் நலத்துடன் இருப்பதாகவும், சில நாட்களுக்குப் பின் தலையில் காணப்பட்ட பண்டேஜ் நீக்கப்பட்டதாகவும் வட கொரிய உளவுத்துறை தெரிவித்துள்ளது. (நி-5)



# ...வூர்தி மோதல் ...3 பேர் படுகாயம்



# கடும் நிதி நெருக்கடியில் பாகிஸ்தான்

## பிரதமரின் இல்லத்தை வாடகைக்கு விட முடிவு

(இஸ்லாமாபாத்)

கடும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தான் அரசாங்கம் பிரதமர் இம்ரான்கானின் உத்தியோகபூர்வ அரசு இல்லத்தை வாடகைக்கு விட முடிவு செய்துள்ளது.

கல்வி மற்றும் கலாசார நிகழ்ச்சிகளுக்காக குறித்த இல்லத்தை வாடகைக்கு விடத் தயார் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியிருப்பதால் அரச செலவினங்களைக் குறைப்பதற்காக ஆடம்பரமான அரச இல்லத்தில் பிரதமரும் ஆளுநர் மாளிகைகளில் ஆளுநர்களும் தங்கப் போவதில்லை என்று அறிவிக்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டின் நிதிக் கட்டுப்பாட்டு அமைப்பு கிரே பட்டியலில் வைத்திருப்பதால் உலக நாடுகளின் நிதியுதவி கிடைக்காமல் பாகிஸ்தான் நிதி நெருக்கடிக்கு ஆளாகியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

# கரன்னகொடவிற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை தொடர முடியாது

## சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட மீது குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

இளைஞர்களைக் கடத்தி, காணாமல் ஆக்கியமை, அவர்களைக் கொலை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட உள்ளிட்ட பிரதிவாதிகள் 14 பேருக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த குற்றப் பத்திரிகையை இரத்துச் செய்யக்கோரி முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு கொழும்பு மேல் நீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு வந்தபோதே கரன்னகொட மீது குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# திருமதி உலக அழகிப் போட்டி இம்முறை அமெரிக்காவில்

(கொழும்பு)

இலங்கையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 2021 திருமதி உலக அழகிப் போட்டியை அமெரிக்காவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

2021 திருமதி அழகிப் போட்டியை இலங்கையில் நடத்துவதென 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், தற்போது குறித்த போட்டியை அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2021 திருமதி அழகிப் போட்டி எதிர்வரும் 2022 ஜனவரி 15 ஆம் திகதி லாஸ் வேகாஸில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (நி-5)

# 19 மாவட்டங்களில் நெல் கொள்வனவு

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் தற்போது ஒரு இலட்சத்து 15 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

19 மாவட்டங்களில் நெல் அறுவடையை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெறுகிறது.

தற்போது ஒரு இலட்சத்து 15 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்காக 300 களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டிருப்பதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் உப தலைவர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.

நெல் கொள்வனவுக்காக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து நட்டஈடு வழங்க 420 மில்.ரூபாய் ஒதுக்கீடு



(கொழும்பு)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளானதில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்காக இது வரையில் 420 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய கம்பஹா, கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு தற்போது வழங்கப்பட்டு வருவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீக்குள்ளானதால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்கு முறையான மற்றும் ஒழுங்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2372

Search for people, places and things

**சிவானுஜா**

மற்றவர்களிடம் இருப்பவை எல்லாம் நம்மிடம் இருக்கின்றனவா என்று பார்க்கின்றோமே தவிர...




நம்மிடம் இருப்பவை எத்தனை பேரிடம் இல்லை என்பதை பார்க்கத் தவறி விடுகிறோம்...!

**ஜித்தன்**




**கமலாஜினி**

முள்ளின் வலி ஒரு நிமிடம்....!



சொல்லின் வலி பல வருடம்....!

**கோகிலராஜி**

அதாவது ரோட்ல நின்னு சும்மா ஏ....நாயேன்னு கத்திப் பாருங்க.... எல்லாரும் திரும்பிப் பாப்பாங்க



ஆனால் நாய் மட்டும் திரும்பவே திரும்பாது. வேனும்னா ட்ரை பண்ணிப் பாருங்களேன் பொழுது போகாட்டி

**துசானி**




**கயல்**



நேரம் போய்க் கொண்டேதான் இருக்கும். எனவே நீ செய்ய வேண்டியதை செய். அதுவும் இப்போது செய்...காத்திருக்காதே

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவே பேருந்துகளில் பயணிகளை ஏற்றலாம்

## மீறினால் சாரதி, நடத்துநர் கைது

(கொழும்பு) **பேருந்துகளில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்லும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களை கைது செய்து தனிமைப்படுத்தல் சட்டத்தினை நடைமுறைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.**




அதன்படி, உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நடைமுறையை அமுல்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு போக்குவரத்து இராஜாங்க அமைச்சு நேற்று எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

பேருந்துகளில் இருக்கைகளுக்கு மேலதிகமாகப் பயணிகள் ஏற்றப்படுவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சருக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். (நி-5)

# இலங்கையில் மட்டுமே 5 வகையான தடுப்பூசிகள்

## மார்தட்டுகிறது அரசாங்கம்




(கொழும்பு)

உலகில் பலமான நாடாகவுள்ள அமெரிக்காவில் கூட இரண்டு விதமான தடுப்பூசிகளையே வழங்க முடிந்துள்ள நிலையில் எம்மால் ஐந்து விதமான தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்க முடிந்துள்ளதாக அமைச்சர் ரோஹித அபே குணவர்தன சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

கொவிட் தொற்றுக்கு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுப்பதே அனைத்து நாடுகளும் இதிலிருந்து மீள்வதற்கு உள்ள ஒரே வழியாகும்.

தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கமென்ற ரீதியில் எமது கடமையாகும். தடுப்பூசியை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் தடுப்பூசிகளை நாட்டுக்கு கொண்டுவர அரசாங்கத்திடம் நிதியில்லையென எதிர்க்கட்சியினர் விமர்சித்தனர்.

யாழ்ப்பாணத்தில் கூட 71 சதவீதமானவர்களுக்கு தடுப்பூசிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. எமது நாட்டில் சினோபார்ம், அஸ்ட்ரா ஜெனெகா, ஸ்புட்னிக், மொடோர்ணா, பைசர் என ஐந்து விதமான தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன. உலகில் பலமான நாடாகவுள்ள அமெ ரிக்காவில் கூட இரண்டு தடுப்பூசிகள் தான் வழங்கப்படுகின்றன.

அதேபோன்று சினோவெட் என்ற தடுப்பூசியை இலங்கையில் உற்பத்தி செய்யவும் எதிர் பார்க்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# கொரோனாவால் உயிரிழந்த பலருக்கு வேறு நோய்களின் தாக்கமே காரணம்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நோய்களின் தாக்கமே காரணம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவை இணை ஊடகப்பேச்சாளர் மருத்துவர் ரமேஷ் பத்திரண இதனை குறிப்பிட்டார்.

கொரோனா தொடர்பான இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும், பெரும்பாலானவர்களுக்கு கொமொர்பிடிட்டி எனப்படும் பிற சிக்கல்களும் இருந்தன. மேலும் இறந்தவர்களில் சிலர் தடுப்பூசி போடப்படவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது என [illegible] தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குழந்தையின் உணவுப் பழக்கம்!

"என் குழந்தை சரியாவே சாப்பிடுகிறதில்லை... அதை நினைத்தால் தான் ரொம்பக் கவலையாக இருக்கிறது!" இப்படிச் சொல்லி வருத்தப்படுகின்ற அம்மாக்கள் தான் நிறையப்பேர் உண்டு.

ஆனால் குழந்தைகள் சம்பந்தமான நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"என் குழந்தை இப்படிச் சாப்பிட வேண்டும் – அப்படிச் சாப்பிட வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்!" என்று சொல்கிறார்கள்!

நாம் எதிர்பார்க்கிற மாதிரியே குழந்தைகள் நடந்து கொள்ள வேண்டு என்ற ஒன்றும் காட்டாயம் இல்லை. குழந்தைகளின் பசி என்பது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உட்பட்டது தான்.

குழந்தைகள் அதிகமாக விரும்பி சாப்பிடுகிற உணவு எப்படி இருக்கும் தெரியுமா? அதிக எண்ணெய்ப் பசை இருக்கக் கூடாது. பார்க்கிறதிற்கு அழகாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட உணவைத் தான் குழந்தை அதிகமாக சாப்பிடும்.

பெரியவர்களை விட குழந்தைகளுக்கு சுலபாக வாந்தி எடுக்க வந்துவிடும். அதனாலேயே எண்ணெய்ப் பதார்த்தங்களை, தான் அறியாமலே தவிர்த்துவிடும்.

சில தாய்மார்கள் குழந்தை பேரிலே உள்ள ஆசையில் தட்டு நிறைய ஆகாரத்தை நிரப்பிக் கொண்டு வந்து வைத்து விடுவார்கள். குழந்தை அதைப்பார்க்கும், உடனே அதற்கு என்ன தோன்றும் தெரியுமா?

"நிறையப் போட்டு நம்மளைச் சாப்பிடச் சொல்லி கட்டாயப்படுத்துவார்கள்!" என்று தோன்றும். தட்டிலே கொஞ்சம் கொஞ்சமாக ஆகாரத்தை வைக்கலாம். அப்படி வைத்துவிட்டு குழந்தையைப் பார்த்து, "பார்த்தியா? எல்லோரையும் விட உனக்குத்தான் கொஞ்சமாக போட்டிருக்கிறேன்!" என்று சொல்ல வேண்டும்.

இன்னொரு வழி கூட இருக்கிறது... தட்டுப் பெரிசாக இருக்கலாம். கொஞ்ச ஆகாரத்தை பெரிய தட்டிலே வைத்து கொடுத்தால் பார்க்கிறதிற்கு ரொம்ப குறைவாகத்தான் தெரியும்.

குழந்தையும் மிரளாமல் சாப்பிடும்! இன்னொரு விடயம் ஒரு குழந்தை தனக்குப்பிடித்த ஆகாரத்தை தானே தேர்ந்தெடுக்கிற மாதிரி செய்ய வேண்டும்.

அதற்கு என்ன செய்யலாம் என்றால் முடியும் போதெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட உணவு வகைகளை வைக்கலாம். உதாரணத்திற்கு இட்லியும், உப்புமாவும் வையுங்கள்... எது வேண்டும் என்றாலும் எடுக்கட்டும்.

ரொம்பப் பேர் செய்கிற ஒரு பெரிய தப்பு... சாப்பிடும் போது குழந்தையை மிரட்டுகிறது! "ஒழுங்காக சாப்பிட வேண்டும், இல்லையென்றால் பூச்சாண்டியிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்!" என்று மிரட்டுவார்கள் சிலபேர்.

இதெல்லாம் பிரயோசனப்படாது. அதுவும் இந்தக் காலத்துப் பிள்ளைகள்... நம்மளையே பிடித்து பூச்சாண்டியிடம் கொடுத்து விடும்.

குழந்தை பயந்து போய்விட்டது என்றால் அது டென்ஷனா மாறும். பிறகு அது பசி இன்மையை ஏற்படுத்தும்! அதற்குப்பிறகு அது சாப்பிடுகிற அளவு இன்னும் குறையும்.

குழந்தை பிடிவாதமாக சாப்பிடமாட்டேன் என்று சொன்னால் அதனிடம் பேரம் பேசுகிறது கூட தப்பில்லை! காய்கறிகளைச் சுத்தமாக சாப்பிட மாட்டேன் என்று அடம்பிடிக்கிற குழந்தைகளிடம் குறைந்தபட்சம் கரட் மட்டுமாவது சாப்பிடச் சொல்லலாம்.

ஒரு குழந்தை தான் எதைச் சாப்பிட வேண்டும் என்று தானே தீர்மானிக்கிறது. அது தான் தன் சுதந்திரத்தை நிலைநாட்ட முயலுகிறது!

அந்தச் சமயத்திலே நீங்கள் "அதைச் சாப்பிடாதே! இதைச் சாப்பிடாதே!" என்று சொல்லிக் கொண்டிருந்தால் அதன் எதிர்ப்பு இன்னும் அதிகமாகி விடுகிறது.

வயிறு நிறைந்து விட்டது என்று சொல்லிட்டால் சரி என்று விடுங்கள்.. "இல்லை இல்லை இன்னும் கொஞ்சம் சாப்பிடு" என்று சொல்லிக்கொண்டு இருக்காதீர்கள்.

இதெல்லாம் குழந்தை வளர்ப்பு நிபுணர்கள் நமக்குச் சொல்லிக் கொடுக்கிற ஆலோசனைகள். ஒருத்தர் "குழந்தை வளர்ப்பது எப்படி?" என்ற ஒரு புத்தகம் எழுதினார். ரொம்ப பெரிய புத்தகம். அவருடைய நண்பர் ஒருத்தர் ஒருநாள் அவரைத் தேடி வந்து சொன்னார்.

"சேர் நீங்கள் குழந்தை வளர்ப்பது எப்படி என்று ஒரு பெரிய புத்தகம் எழுதியிருக்கிறீங்களே... அது எனக்கு ரொம்ப உபயோகமாக இருக்கிறது சேர்!" என்றார்.

"அப்படீங்களா?" என்றார் இவர்.

"ஆமாங்க... தினமும் என் பையன் ஏதாவது தப்பு செய்தான் என்றால் அந்தப் புத்தகத்தினால் தான் அவனை வீசி அடிக்கிறேன்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

45

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



● விளையாட்டுக்கழகங்கள், கிராம அபிவிருத்திச் சபைகள் ஆகிய நிறுவனங்களுக்கு அரச காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

● கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரச காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

● அரசுடன் இணைந்து நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு விசேட அளிப்பு அல்லது குத்தகை மூலம் அரச காணியைப் பெற்றுக் கொடுத்தல். என்பனவாகும்.

**குறிப்பு 2:- நீண்டகாலக் குத்தகை அனுமதிப் பத்திரங்கள் வழங்கல்.**

1947 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குத்தகை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. வதிவிடம், கமச் செய்கை மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு 30 வருடங்களுக்கு நீண்டகாலக் குத்தகை வழங்கப்படுகின்றன.

விசேட செயற்றிட்டங்களுக்காக குத்தகைக் காலப் பகுதியை 50 வருடங்களாக நீடிக்க முடியும். ஆரம்ப குத்தகைக் காலம் வெற்றியாக நிறைவைப் பெற்றிருக்குமிடத்து மீண்டும் குத்தகைக் காலத்தை நீடிக்க முடியும். இந்த அனுமதிப்பத்திரத்தைக் காணி ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதியைப் பெற்றுக் கொண்டு கைமாற்றம் செய்யவோ ஈடு வைக்கவோ முடியும்.

**குறிப்பு 3:-அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப்பத்திரங்கள் (issue of grants) வழங்குதல்.**

வதிவிட நோக்கத்திற்காகக் குத்தகையில் வழங்கப்பட்ட காணி, வெற்றிகரமாக செய்முறைப்படுத்தப்பட்டிருப்பின், காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியை அறவிட்டுக் கொண்டு அளிப்புப் பத்திரம் ஒன்றை வழங்க முடியும். இந்த அளிப்புப்பத்திரம் வழங்கப்பட்ட பின்பு, குறித்த நபருக்குக் காணியின் பூரண உரிமை உரித்தாகும்.

**குறிப்பு 4:- அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விசேட அளிப்புப் (Special Grants) பத்திரங்கள் வழங்குதல்.**

விசேட காரணங்களுக்காக அதி உத்தம ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு, அளிப்புப் பத்திரம் வழங்க முடியும். இதற்குப் பணம் அறவிடப்படமாட்டாது. அரசின் விசேட சமூக சேவைகளுக்கான செயற்றிட்டங்களுக்காகப் பல்வேறு அரசு சார்ந்த நிறுவனங்களுக்குக் காணிகள் வழங்குவதும், அரசு சுவீகரிப்புச் / கையேற்புச் செய்த தனிப்பட்ட நபர்களின் காணிகளுக்கான நட்ட ஈட்டுத் தொகையைப் பெற்றிராத நபர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்குவதும் இதற்கு உதாரணங்களாகும்.

**குறிப்பு 5:- அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பூஜா உறுதிகள் (Pooja Deed) வழங்குதல்.**

இவை விஹாரைகளுக்கு வழங்கப்படுகின்றன. முதலாவதாக நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபைக்கு ஆரம்பக் குத்தகை முறி வழங்கப்படுகின்றது. இரண்டாவதாக விஹாரைக்குப் பொறுப்பாக உள்ள விஹாராதிபதிக்கு மற்றும் பரம்பரைக்கும் விடுவிப்பு அளிப்புப் பத்திரம் வழங்கப்படுகின்றது.

**குறிப்பு 6:- அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உடைமைச் சொத்துவம் (Vesting Orders)**

முப்படைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் காணிகளின் உடைமைச் சொத்துவம் வழங்கப்படுகின்றன. இதற்காக உடைமையாக்கல் கட்டளைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பு 7:- அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகளை விடுவித்தல் (Releasing of Land).**

அரச திணைக்களங்களுக்குக் காணிகளை வழங்கும் போது காணிகளை விடுவிக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் (**Releasing Certificates**) வழங்கப்படுகின்றன.

**குறிப்பு 8 :- சுனாமி அன்பளிப்புக்கள் வழங்கல்:-**

சுனாமி பேரழிவு காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு மாற்றுக்காணிகள் கொடுக்கும் இலவச அன்பளிப்புக்கள் வழங்கும் வேலைத்திட்டம் 2007 ஆம் வருடம் தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பு 1 தொடக்கம் 8 வரையுமுள்ள பராதீனம் செய்யும் அதிகாரம் காணி ஆணையாளர் நாயகத்திடமே உள்ளது. இவ்விடயங்கள் சம்பந்தமாக எந்தவொரு அதிகாரமும் மாகாண சபையிடம் இல்லை. முன்னர் கூறியது போல், இவ்விடயம் ஒருங்கிணை நிரலில் வருவதால் காணி பராதீனப்படுத்தல் சம்பந்தமான எந்தவொரு விடயமும் மாகாண சபையின் ஆலோசனையுடனேயே செய்யப்படல் வேண்டும்.

**காணிகள் அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் -1979 இல 43 (Land Grants (Special Provisions) Act)**

இது காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உடைமையாக்கப்பட்ட விவசாய மற்றும் தோட்டக்காணிகளை அரசுடைமையாக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் அவ்வாறு அரசுடைமையாக்கப்பட்ட காணிகளை எதுவித கட்டணமுமின்றி காணியற்றவர்களுக்கு மாற்றியளிக்கக் கூடியதாகவும், இது தொடர்பான இடைநேர் விளைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும்.

அரசுக்கு உடைமையாக்கப்பட்ட ஏதேனும் காணியின் ஒரு பங்கினை ஆதன வளிப்புப் பத்திரம் ஒன்றின் மூலம் 18 வயதிற்கு மேற்பட்ட எந்தவோர் இலங்கைப் பிரஜைக்கும் எதுவித கட்டணமும் அறவிடப்படாமல் ஜனாதிபதியால் மாற்றியளிக்கப்பட முடியும்.

இப்பிரிவின் கீழ் அரசின் எந்தவொரு காணியும் ஒப்படைக்கப்படும்போது கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதிகவனம்செலுத்தல்வேண்டும்.

● உத்தேசப் பெறுநர் சொந்தக் காணி எதுவுமற்றவராக இருத்தல்.

● உத்தேசப் பெறுநரின் குடும்ப வருமான மட்டம்.

● குறித்த காணியை விருத்தி செய்வதற்கு உத்தேச பெறுநருக்குள்ள ஆற்றல்.

இவ்விடயங்கள் சம்பந்தமாக எந்தவொரு அதிகாரமும் மாகாண சபையிடம் இல்லை.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் அனுபவித்து வந்த சொற்ப அதிகாரங்களையும் இல்லாமல் செய்யும் முயற்சிகள் இப்போது மேற்கொள்வதை அறிவீர்கள்.

2020 பொதுத் தேர்தல் பிரச்சாரங்களில் "13, 19 ஆகிய அரசியலமைப்பு திருத்தச் சட்டங்களை நீக்குவதற்கு மூன் றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைத் தாருங்கள் என்று" பகிரங்கமாக சிங்கள பௌத்தர்களிடம் கோரி வந்தார் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ. அதன்படி 19 ஆவது திருத்தம் இல்லாமல் செய்யப்பட்டு விட்டது.

மாகாண சபைகள் முறையும் கலைக்கப்பட்டு, இல்லாமல் செய்யப்பட்டால் குறைந்தபட்சம் இருக்கிற சகல அதிகாரங்களும் பறிக்கப்பட்டுவிடும் ஆபத்து இருக்கவே செய்கிறது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரம் இறக்குமதிக்கான தடை நீக்கம்

## மகிழ்ச்சியில் விவசாயிகள்

(கொழும்பு)

**நாட்டில் இரசாயன உரம் இறக்குமதி செய்ய விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை நீக்க அறிவிப்பு அடங்கிய கடிதத்தை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கையொப்பமிட்டு வங்கிகளின் பிரதானி களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.**

இரசாயன உரம் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை எக்காரணத்தைக் கொண்டும் மீளப்பெறப்படாது என பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் அறிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த சேதனப் பசளை திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக அவர் கூறியிருந்தார். எனினும் திடீரென இரசாயன உரம் இறக்குமதி தடை விதிக்கப்பட்டதால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கினர். விவசாயிகளின் பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

இருந்தபோதும் இரசாயன உரம் இறக்குமதிக்கான தடை மீளப்பெறப் படாது என உறுதியாகக் கூறிய அரசாங்கம் தற்போது தன்னுடைய நிலைப் பாட்டில் இருந்து மாறி இரசாயன உரம் இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அளித்துள்ளது.

அதன்படி ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் இரசாயன உரம் இறக்குமதி செய்யக்கூடிய அளவிலான ஏற்பாடுகளை நிதி அமைச்சு முன்னெடுத்துள்ளது. (நி-5)

# வடமாகாணத்தில் பண்ணைகளை படையினரே நடத்துகின்றனர்

## பாராளுமன்றில் சமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பல விவசாயப் பண்ணைகளை சிவில் பாதுகாப்பு படையணி நடத்தி வருவது உண்மையே. நாட்டுக்கு தேவையான உணவுகளை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும் என சபையில் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங் குளம் பிரதேசத்தில் உள்ள நூறு ஏக்கர் நிலப்பரப்பில் இலங்கை இராணுவம் விவசாய பண்ணைகளை நடத்தி புனர் வாழ்வுக்குட்படுத்தப்பட்ட முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது.

வடக்கு மாகாணத்தில் சிவில் பாதுகாப்புப் படைகளின் கீழ் இயங்கும் விவசாய பண்ணைகள் குறித்து பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-5)


**வீடு வாடகைக்கு**

கொக்குவில் கிழக்கு சம்பியன் லேனில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு

**077 968 9119**

(7559)



**31ஆம் நாள் நினைவஞ்சலி**

அமரர். திரு. **பொன்னையா வசந்தநாதன்**



கடந்த 06.07.2021
செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எங்கள்
அன்புத் தெய்வம்
அமரர். திரு. பொன்னையா
வசந்தநாதன்
அவர்களின் அந்தியேட்டிக்
கிரியைகள் 05.08.2021 இன்று
வியாழக்கிழமை 9.00 மணியளவில்
கீரிமலை புனித
தீர்த்தக்கரையில் நடைபெற்று
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
நணபகல் 12.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அன்பின் உருவாகி எம்மை அன்பால் அரவணைத்த தெய்வமே
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டித் துதிக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு. (7547)

குடும்பத்தினர்
077 524 6657



**31ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர் திருமதி

**பூவையா பங்கயம்**

**பிறப்பு: 28.12.1945 இறப்பு:11.07.2021**

**திதி: ஆனிமாத பூர்வபக்க துதியை**

கடந்த 11.07.2021 அன்று இறைபதம் எய்திய
எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள்
06.08.2021 நாளை வெள்ளிக்கிழமை வில்லூன்றி
புனித தீர்த்தக் கரையில் நடைபெறும்.
தொடர்ந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்
மதியபோசன நிகழ்வும் எதிர்வரும்
10.08.2021 செவ்வாய்க்கிழமை
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் சுகாதார விதி நடைமுறைப்படி
நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவருக்கும்
அறியத் தருகின்றோம்.

எமது குடும்பத் தலைவியை நாம் இழந்து நின்றபோது சகல
வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்.

(7551)

**236/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மேதைகள்



இரண்டொரு வாரங்கள் கழிந்தன. தற்செயலாக விஷ்லர், ரோசெட்டி வீட்டுக்குச் சென்றார்.

பேச்சுக்கிடையே, "சட்டம் வந்து சேர்ந்து விட்டதா? நீங்கள் பூரண நிறைவு பெறும்படி ஓவியத்தைச் செய்து விட்டீர்களா?" என்று கேட்டார்.

"ஓ முடித்துவிட்டேன்! வாருங்கள் காட்டுகிறேன் "என்று ரோசெட்டி அவரை அழைத்துச் சென்று சட்டமிடப்பட்ட தன் ஓவியத்தைக் காண்பித்தார்.

அந்த ஓவியத்தைச் சுற்றி மிக அழகான சட்டம் ஒன்று இடப்பட்டிருந்தது. "ஆஹா! சட்டமும் அற்புதம்!" என்று பாராட்டினார் விஷ்லர்.

"அதன் பிறகு என்ன செய்தீர்கள், புதிய ஓவியம் ஏதாவது வரைந்தீர்களா?" என்று கேட்டார் விஷ்லர்.

"இல்லை. அதற்கான அவகாசம் எனக்கு இல்லை!" என்றார் ரோசெட்டி. விஷ்லர் ஆச்சரியம் அடைந்தார்.

"ஓவியம் வரைவது உங்கள் வேலை. ஆனால், ஓவியம் வரையவில்லை. இந்த ஓவியமும் முடித்துவிட்டீர்கள். அப்படி இருக்க அவகாசம் இல்லை என்று கூறுகின்றீர்களே! இது என்ன அதிசயம்!" என்று கூறினார்.

"மிஸ்டர் விஷ்லர் நான் ஓவியம் வரையத்தான் அவகாசம் இல்லை என்றேன். அதற்காக நான் ஓய்வெடுக்கவில்லை!" நான் வரைந்த ஓவியத்தைப் பற்றி அழகான கவிதை ஒன்றை எழுதினேன். கவிதை எழுதவே இத்தனை நாட்களாயிற்று!"" என்று கூறினார்.

"கவிதையா?" என்று ஆச்சரியமடைந்த விஷ்லர் "எங்கே காட்டுங்கள்?"" என்றார். அவர் மிகப் பெரிய மேதையல்லவா?


ரோசெட்டி கவிதையை எடுத்து வந்து தனக்கே உரித்தான கம்பீரமான குரலில் ஏற்ற இறக்கங்களுடன் சரியான பாவனையுடன் அதைப் படித்துக் காட்டி விட்டு விஷ்லரிடம் தந்தார்.

விஷ்லர் கவனமாக அதைக் கேட்டார். பின் தானே ஒருமுறை படித்துப் பார்த்தார்.

"உங்களுடைய ஓவியத்தை விட இந்தக் கவிதை அபாரம் அற்புதம். நல்ல கற்பனை! நீங்கள் அந்த ஓவியத்தைச் சட்டத்திலிருந்து எடுத்து விட்டு இந்தக் கவிதைக்குப் போடுங்கள் அந்தச் சட்டத்தை!" என்று கூறினார்.

**நீதி : மற்றவர்களின் திறமையை நாம் பாராட்ட வேண்டும், அந்த மனநிலை நம்மிடம் இருந்தால் நாம் மாமேதையாக திகழலாம்.**

# மகாபாரதம்




புத்திரனை இழந்த சோகத்தால் பீடிக்கப்பட்ட சிருஞ்சிய மன்னனுக்கு நாரதர் சொன்ன ஒரு வரலாற்றை உனக்கு நான் சொல்கிறேன்.

சிருஞ்சியனை நோக்கி நாரதர் "வேந்தே இறந்து போன மாமன்னர்களின் வரலாற்றைக் கேட்டபின் உனது துன்பம் தொலையும் என எண்ணுகிறேன்.

முன்னொரு காலத்தில் மருத்தன் என்னும் மன்னன் ஒருவன் இருந்தான். இந்திரன், வருணன், பிரகஸ்பதி முதலானோர் வந்து சிறப்புச் செய்யும் அளவிற்கு யாகம் செய்த பெருமை மிக்கவன் அவன்.

அம்மருத்தனது ஆட்சியில் வித்தின்றியே விளைவு மிகுந்திருந்தது. உழவு முதலியன இன்றியே தானியங்கள் எங்கும் குவிந்து கிடந்தன.

தேவர்களுக்கும் கந்தர் வர்களுக்கும் அவன் அளித்த அளவிற்கு வேறு யாரும் தானம் அளித்ததில்லை. உன்னையும், உன் மகனையும் விட அம்மருத்தன் ஞானம், தருமம், செல்வம், வைராக்கியம் ஆகிய நான்கினும் சிறந்து விளங்கினான்.

அத்தகையவனே இறந்து விட்டான் எனில் உன் மகன் இறந்து போனது குறித்து நீ ஏன் கவலைப்படுகிறாய்?

சுகோத்திரன் என்னும் மன்னனும் இறந்து விட்டான். அவன் என்ன சாதாரண மன்னனா? அவனது மேன்மையை அறிந்த இந்திரன் அவன் விருப்பத்திற்கு ஏற்ப ஒரு வருடம் பொன் மாரி பெய்வித்தான்.

ஆறுகளில் பொன்னீர் ஓடிற்று. அவற்றில் மீன், நண்டு, ஆமை கூட பொன்னிறமாய்க் காட்சி அளித்தது.

பலயாகங்களில் பொன்னையும், பொருளையும் அனைவருக்கும் வாரி வாரி வழங்கினான். அத்தகைய மன்னனும் மாண்டு விட்டான் எனில் ஒரு யாகமும் செய்யா உன் மகன் இறந்ததற்கு ஏன் அழுகிறாய்.

அங்க தேசத்து அரசன் பிரகத்ரதன் அவன் செய்த யாகத்தின் போது இலட்சக்கணக்கான யானைகளையும், குதிரைகளையும், பசுக்களையும் காளைகளையும் பிராமணர்களுக்குத் தானமாக அளித்தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாழ்வின் வெற்றி என்பது ஒரு மனிதன் பின்பற்றும் சத்தியத்தைப் பொறுத்தது.*

*– ஸ்ரீ அன்னை*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## செய்த பாவபழிகள் சுற்றிவளைத்து நிற்கையில்...

பாவ பழிகள் பற்றிப் பேசாத ஞானிகள் இல்லை. யோகிகள் இல்லை. உலகுக்குப் போதனை செய்த ஆன்மீகவாதிகள்; பாவம் செய்யாதே! பிறரை நிந்திக்காதே! பிற ஜீவ ராசிகளைக் கொல்லாதே! புலால் உண்ணாதே! உன்னைப்போல் மற்றவர்களையும் நேசி! என்றெல்லாம் போதனை செய்தனர்.

அந்தப் போதனைகள் பாவத்தினின்றும் மக்கள் சமூகத்தைக் காப்பாற்றுவதற்கானதாகும்.

பாவம் செய்வதைத் தடுக்காவிட்டால், இரண்டு பக்கமும் துன்பத்தை அனுபவிக்க வேண்டிவரும்.

ஆம், ஒருவன் கொலை செய்கின்றான். அந்தக் கொலையால் ஏற்பட்ட உயிரிழப்பு அவன் சார்ந்த குடும்பத்தை வதைக்கும்.

அதேநேரம் கொலை செய்தவன் சிறைக்கும் பின்னால் கர்ம வினைக்கும் ஆளாகி அவஸ்தைப்படுவதால், அவன் சார்ந்த குடும்பம் ஆற்றலைகிறது.

ஆக, கொல்லப்பட்டவனும் கொலை செய்தவனும் துன்பத்தை அனுபவிப்பதைத் தவிர, வேறு எதுவும் நடந்ததாகவில்லை.

எனவேதான் பாவத்தினின்றும் மக்கள் சமூகம் மீண்டெழுமாக இருந்தால், எங்கும் புனிதமும் தெய்வீகமும் மலர்ந்தருளும்.

ஒவ்வொரு மனிதனிடத்தும் தெய்வீகம் ஏற்பட்டுவிட்டால், இவர் தமிழர். அவர் சிங்களவர். அங்கே பௌத்தர், இங்கே சைவர் இவரை மதம் மாற்ற வேண்டும். அந்தச் சமயத்துக்கு எதிராகத் துரோகம் இழக்க வேண்டும் என்ற கயமைத்தனங்களுக்கு இம்மியும் இடமில்லாமல் போகும்.

எல்லோரும் நமர். எல்லோரும் மனிதர்கள். எல்லோரும் இறைவனின் படைப்பு என்ற அன்பு நிலை ஏற்பட்டுவிட்டால் அதைவிட்ட மனித வாழ்வு ஏது.

என்ன செய்வது போலிகள் ஆன்மீகவாதிகளாகிவிட்டனர். அவர்கள் ஆன்மீகத்தை வைத்துச் சீவியம் நடத்தத் தலைப்பட்டனர். தங்கள் தொழில் சிறப்புறுவதற்காக மதவாதத்தை – இனவாதத்தை திட்டமிட்டுத் தூண்டுகின்றனர்.

உண்மை, கௌதம புத்தபிரானின் போதனைகளை பின்பற்றவும் அதனை மக்கள் சமூகத்துக்குப் பரப்பவும் வேண்டிய சாதுக்கள் எப்படியாக நடந்து கொள்கிறார்கள் என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

இப்போதெல்லாம் ஆட்சித் தரப்புக்கு எதிராகக் கடும் போராட்டங்கள் நடக்கின்றன.

இதில் பௌத்த பிக்குகளும் பங்கேற்கின்றனர். இந்த அரசாங்கம் தமிழர்களுக்கு உள்ளித் தைலம் வைக்கும் என்று நினைத்தவர்களே இன்று வீதியில் இறங்கி அரசுக்கு எதிராகக் கோசம் போடுகின்றனர்.

என்ன செய்வது பாவபழிகள் வந்து சூழ்ந்துவிட்டன. இனி மீள்வது முடியாத காரியம் என்பதைத் தவிர, வேறு எதைத்தான் நாம் சொல்ல முடியும்.

# பொது இடங்களுக்கு செல்ல கோவிட் தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படலாம்

## தவறவிட்டவர்கள் தவறாது தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவும்

### யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் காலங்களில் கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொண்டமையை உறுதிப்படுத்தும் அட்டை சில அரச திணைக்களங்கள், வைத்தியசாலைகள், சுப்பர் மார்கட் போன்ற பொது இடங்களிலும் மற்றும் பேருந்துகளிலும் கட்டாயப்படுத்தப்படும் நிலைமை ஏற்படலாம். ஆகவே, கொரோனா தடுப்பூசியை 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும்பெற்றுக்கொண்டு அதற்கு அடையாளமாக வழங்கும் அட்டையையும்" பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் முதற் கட்ட கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையானது எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. நாங்கள் 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி வழங்கி வருகின்றோம்.

அதேநேரத்தில் சகல தொழிற்துறைகளிலும் ஈடுபடுகிறவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. யாரேனும் தொழில்துறையில் ஈடுபடுகின்றவர்கள் இவ்வாறு தடுப்பூசிகளைப் பெறாவிடில் அண்மையிலுள்ள பிரதேச செயலாளரை அல்லது பொது வைத்திய அதிகாரியைத் தொடர்பு கொண்டு தடுப்பூசியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது மிகவும் கட்டாயமானதொரு தேவையாகும். இது சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படாவிடினும் சமூகத்தின் பாதுகாப்புக் கருதி கட்டாயம் தேவைப்படுகின்றது என்றும் கூறியுள்ளார்.

(ம-3,18)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** பாரதிபுரம், எல்லப்பர் மருதங்குளம அகத்திமோட்டை, அந்தோனியார்புரம், இலுப்பபைக்கடவை, கள்ளியடி, கூராய், கோவில் குளம், குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், முதலியார் குளம், இலுப்பைக்கடவை சீது விநாயகங்குளம், தேத்தவாடி, விடத்தற்தீவு- மருத்துவமனை, விடத்திற்தீவு- கிராமம், கலசியம்பலாவ, பெரிய நொச்சிக் குளம், சின்னத்தம்பனை, வீரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வீட்டில் திடீரென மரணமான தம்பதியருக்கு கொரோனா

### கரலியில் சம்பவம்

(காலி)

காலி மாவட்டம், நாகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் திடீரென உயிரிழந்த தம்பதியினர் கொரோனா வைரஸ் தொற்றினாலேயே உயிரிழந்துள்ளனர் என்று கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நாகொடையைச் சேர்ந்த 73 வயது நபரும், அவரது 72 வயது மனைவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த வயோதிபர் இரு நாட்களுக்கு முன் வீட்டில் மரணமடைந்த நிலையில் அவரது சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர் கொரோனாத் தொற்றால் மரணமடைந்தமை தெரியவந்தள்ளது.

அதேபோன்று அவரது மனைவி நேற்று முன்தினம் அவரது வீட்டில் மரணமடைந்துள்ள நிலையில், அவரது சடலமும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த இருவரது சடலங்களும் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளுக்கு அமைவாகத் தகனம் செய்யப்பட்டுள்ளன. (ம-3)

## சத்திய தரிசனம்



### பிரமாண்ட லிங்கம்

**மனிதனின் மெய்யான நிலை**

❖ "ஈஸ்வரஸ் ஸர்வ பூதானாம் ஹ்ருத்தேசே அர்ஜுனா திஷ்டதி (ஓ அர்ஜுனா, எல்லாவுயிர்களிலும் இதயப் பகுதியில் இறைவன் வசிக்கிறான்) என்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் கூறுகிறார்.

❖ ஏதோ விசேஷமாக அமர்நாத், காசி, திருப்பதி, கேதாரம், கோகர்ணம் போன்ற நகரங்களில் மட்டுமே அவர் இருப்பதில்லை.

❖ சமுத்திர நீரின் ஒவ்வொரு துளியிலும் உப்புச்சுவை மற்றும் அதன் சேர்க்கை சமுத்திரம் என்ற பெயர் இருப்பது போல ஒவ்வொரு ஜீவனிலும் கடவுளின் தெய்வீகச் சுவை, சேர்க்கை மற்றும் நாமம் உள்ளது. நீதான் அதனைத் தெளிவாக உணரவில்லை.

❖ கோதாவரி நதி கடலை அடையும்போது தன்னை உணர்கிறது; மனிதன் பரமாத்மாவில் கலக்கும்போது தன்னை உணர்கிறான்.

❖ எது இலட்சியத்தில் சென்று கலக்கிறதோ அது லிங்கம்: "லீயதே கம்யம் இதி லிங்கம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்தலாவல சட்டமூலம் இந்த வாரம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது

## அரசாங்கம் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் இந்த வாரம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாதென அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

குறித்த சட்டமூலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை விவா தத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமா? என ஐக்கியத் தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.



சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்க அதிக நேரம் தேவை என்று கருதியதாலேயே சட்ட மூலம் இவ்வாரம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது என அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழக சட்டமூலம் விவாதிக்கப் படும் திகதி குறித்து இதுவரையில் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 2021 வாக்காளர் பதிவு ஒன்லைனில் திருத்தங்களை மேற்கொள்ளலாம்

(கொழும்பு)

2021 வாக்காளர் பட்டியலைப் புதுப்பிக்க ஒரு புதிய ஒன்லைன் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

அதன்படி, பொதுமக்கள் தேசிய தேர்தல் ஆணையத்தின் www.election.gov.lk என்ற இணையத்தளத்தின் வழியாக பதிவு செய்து திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

இத்திட்டத்தின் மூலம், 18 வயது நிரம்பிய அனைத்து தகுதியுள்ள இலங்கை பிரஜைகளும் தற்போதுள்ள தேர்தல் பதிவேட்டில் உள்ள பெயர்களில் ஏதேனும் தவறுகள் அல்லது அச்சுப் பிழைகள், குடியிருப்பு மாற்றம், சேர்க்கப்படாத நபர்களைப் பதிவு செய்தல் ஆகியவற்றை. மேற்கொள்ளலாம். (நி-5)



சம்பளத்தை உயர்த்துமாறு தெரிவித்து கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று அதிபர், ஆசிரியர்களின் நடைபவனி இடம்பெற்றது.


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 59 செவ் 1 சூரி 12 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: நிதி பிரிவு (தற்காலிகம்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/2452 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 14 ½ செவ் 7 சூரி 6 இல்<br>உயரம்: 156.5 cm<br>தகைமை/தொழில்: BSc, விஞ்ஞான அதிகாரி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச, தனியார் தொழில்<br>தொ.இ: G/6521 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: செவ் 1 சூரி 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: சொந்தத்தொழில்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/2483 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 12¼ செவ் 4 சூரி 6 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HNDIT, வேலை:-கச்சேரி<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடும் பார்க்கலாம்<br>தொ.இ: G/6522 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 13 செவ் 12 சூரி 10 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரண பெண்<br>தொ.இ: B/2505 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புரட்டாதி<br>கி.பா: 56 ¼ செவ் 1 சூரி 11 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: LLB, Lawyer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி முக்கியம்<br>தொ.இ: G/6525 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 42 செவ் 6 சூரி 9 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: BSc லண்டன் (PR) உண்டு<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/2507 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 9 செவ் 7 சூரி 1 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc, அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: தகுந்தவரன்<br>தொ.இ: G/6535 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## டயகம சிறுமி மரணம்

# சர்வதேச ரீதியிலும் சிக்கலை ஏற்படுத்தும்

## பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகே

(கொழும்பு)

றிசாத் பதியுதீனுக்கும் பிள்ளைகள் உள்ளனர். அவர்களுக்கு பெற்றோர்கள் என்ற உணர்வு இல்லையா? அவர்களின் வீட்டில் இவ்வாறான குற்றங்கள் இடம்பெறுகின்றது என்பது தெரிந்து கொண்டும் எப்படி அவரால் இருக்க முடிந்தது என சபையில் கடுமையாக சாடிய ஐக்கிய மக் கள் சக்தியில் அங்கம் வகிக்கும் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகே, ஹிசாலினியின் மரணத்திற்கு அவரது பெற்றோர், றிசாத் பதியுதீன் மற்றும் குற்றவாளிகள் சகலரும் பொறுப்புக்கூறியாக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அப்பாவி சிறுமி ஒருவரின் மரணம் இன்று நாட்டில் பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. அந்தச் சிறுமி எவ்வாறு இறந்தார் என்பது எமக்குத் தெரியவில்லை.

ஆனால் சர்வதேச ரீதியிலும் இது பாரிய சிக்கலை ஏற்படுத்தும் காரணியாகும்.

சிறுவர் வன்கொடுமைகள் நிறுத்தப்படும் ஆண்டாக இந்த ஆண்டு உள்ள நிலையில் இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் பணிக்கு அமர்த்துதல் ஒரு பேரலையாக தாக்கிக் கொண்டுள்ளது.

இதனை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹிசாலினியின் மரணம் குறித்த விசாரணைகள் அடுத்த இரண்டு வாரங்களில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு உண்மைகளைக் கண்டறிந்து குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் குற்ற வாளிகள் மட்டுமல்ல குறித்த சிறுமியின் பெற்றோரும் தப்பிக்க முடியாது.

ஹிசாலினி பணிக்கு அமர்த்தப்படும் வயதில் இல்லை என்பதை தெரிந்தும் அவரை பணிக்கு அனுப்பியது மிகப்பெரிய தவறாகும்.

எனவே அவர்களும் தப்பிக்க முடியாது. நாட்டில் இவ்வாறு பல சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டுள்ளன. இவற்றை தடுக்க கடுமையான சட்ட திட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.

சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவர வேணடும். அதற்கே நாம் இங்கு இருக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# டெங்கு ஒழிப்புக்கு மோப்ப நாய்களைப் பயன்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

டெங்கு நுளம்புகள் உருவாகக்கூடிய இடங்களை கண்டறிவதற்காக மோப்ப நாய்களை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இதற்காக கண்டி மோப்ப நாய்கள் பிரிவின் ஜொனி மற்றும் ரோமா என்ற இரண்டு நாய்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய, எதிர் காலத்தில் சுற்றாடல் பிரிவு பொலிஸ் அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு இந்த மோப்ப நாய்கள் பயன்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

நேற்று முன்தினம் காலை குறித்த பகுதியில் சடலம் ஒன்று இருப்பதனை அவதானித்த பொதுமக்கள் இது தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்தில் வவுனியா உக்கிளாங்குளம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## குறைந்தபட்ச...

தனியார் மற்றும் அரச துறைகளில் குறைந்தபட்ச சம்பளம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் நேற்று நடைபெற்றது.

அரசு முன்வைத்த குறைந்தபட்ச சம்பள (திருத்தம்) சட்டவரைபு ஒரு நகைச்சுவை என்று தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறினார்.

ஒரு நாளைக்கு 500 ரூபாயினால் யாரும் பிழைக்க முடியாது என்று அவர் சுட்டிக் காட்டினார். (ம-3)

## நல்லூர்க் கந்தன்...

வம் உட்பிரகாரத்தில் 100 பேருடன் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

நல்லூர் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஆலயங்களுக்கான சுகாதார வழிகாட்டலின்படி 100 பேருடன் ஆலய உட்பிரகாரத்தில் மாத்திரம் திருவிழா நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த வருட ஆலய உற்சவத்தினை திறம்பட நடத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுக் கொண்டார். (ம-3,33)

## நாட்டில் மேலும்...

பதிவாகியுள்ள கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4,727ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கோவிட் தொற்று தோன்றிய இடமாகக் கூறப்படும் சீனாவில் இதுவரையில் கோவிட் தொற்றினால் 4,636 பேர் உயிரிழந்துள்ளனர் என வேர்ல்டோமீற்றர் இணையத்தளம் குறிப்பிடுகிறது. (ம-3)

## +2,543...

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 318,737ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## 1,35,760 பேர்...

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 இலட்சத்து 35 ஆயிரம் பேர் வரை கோவிட்-19 தடுப்பூசியின் ஒரு டோஸை பெற்றுள்ளனர். 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கெனவே முதல் இரண்டு கட்டங்களிலும் ஒரு இலட்சம் பேருக்கு முதலாவது தடவை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் 50 ஆயிரம் பேர் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர்.

தற்போது 3 ஆம் கட்டமாக இரண்டு இலட்சம் பேருக்கு முதலாவது தடவையாக தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் கடந்த 29ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுடன் 7ஆவது நாளும் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ரீதியாக 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது. நேற்றைய 7ஆவது நாளில் 14 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் மற்றும் வைத்தியசாலைகளில் என 13 ஆயிரத்து 418 பேர் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். (ம-3,33)

## கொரோனாவால்...

நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட துன்னாலை பொதுச் சுகாதார பிரிவில் துன்னாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த 82 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் 5 மாதங்களுக்கு முன்னரே உடல்நலக் குறைபாடு காரணமாக படுக்கையில் இருந்துள்ளார்.

அவரது மருமகன் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் பணிபுரிந்தபோது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று கடந்த 19ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவரின் உறவினர்கள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டபோது நேற்று முன்தினம் குறித்த வயோதிபருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதனால் அவருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் குறித்த நபருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று மாலை உயிரிழந்துள்ளார். (ம-3,60)

## கொரோனாத்...

ஆனால், அரசோ அசமந்தப்போக்கில் செயற்படுகின்றது."

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வருவதால், ஆலோசனைக் குழுவொன்றைக் கூட்டி முடிவெடுக்க முடியாதா?" எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் சீற்றத்துடன் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வருவதால் அனைத்து வைத்தியசாலைகளிலும் கொரோனாத் தொற்றாளர்கள் நிரம்பி வழிகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் துறைசார்ந்த அமைச்சருக்கு அறிவுறுத்தி ஆலோசனைக் குழுவைக் கூட்டி வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்க முடியாதா?" - என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ம-3)

## இரு...

பலரும் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டதை அடுத்தே நேற்று அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டது.

இது குறித்து கராப்பிட்டிய மருத்துவமனை பதில் பணிப்பாளரால் மருத்துவமனை ஊழியர்களுக்கு எழுத்துபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொரோனா தொற்றாளர்களின் அதிகரிப்பால் இரத்தினபுரி மாவட்ட மருத்துவமனையும் நேற்று அவசர நிலையை அறிவித்தது. அவசர நிலையை அறிவித்துள்ள மருத்துவ மனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் விடுதிகள் நிரம்பியுள்ளதால் அங்கு மேலதிக படுக்கை வசதிகளை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (ம-3)

## வட மாகாணத்...

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் யாழ்.மாவட்டத்தில் 38 பேர் உட்பட வடக்கில் 59 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த 42 பேர் உட்பட 71 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.(ம-3)

## நாட்டினை...

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார அதிகாரிகள் நிலைமையை அவ்வப்போது ஆய்வு செய்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், தற்போது கோவிட் சூழ்நிலையை எதிர்கொள்ளும் நகர்வில் இருப்பதாகவும், அதே நேரத்தில் பொருளாதார மற்றும் சமூக அம்சங்களுடன் சமநிலையைப் பேணுவதாகவும் குறிப்பிட்டார்.

இருப்பினும், கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட வேண்டும் அல்லது நாடு முடக்கப்படவேண்டும் என்று அதிகாரிகள் உணர்ந்தால், தயக்கமின்றி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் வலியுறுத்தினார். (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1130
வெற்றி இலக்கங்கள்
தனுசு 0 3 7 0 3 6
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0874
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
T 16 62 73 76 80

மஹஜன சம்பத
திகதி 2021/08/04
சீட்டிழுப்பு இலக்கம் 4526
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
M 8 1 8 8 6 4
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 04.08.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2821
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
S 27 35 43 52
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2021.08.04
சீட்டிழுப்பு இலக்கம் - 556
B 30 35 48 52
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

சீட்டிழுப்பு இலக்கம் 085
சீட்டிழுப்பு திகதி 04.08.2021
வெற்றி இலக்கங்கள் 09 23 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,944,780/=

அதிர்ஷ்ட கோடிபதி
சீட்டிழுப்பு இல. 1329
சீட்டிழுப்பு திகதி 04.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,376,340
வெற்றி இலக்கங்கள் 12 35 60 71 S

சனிதா
சீட்டிழுப்பு இல. 9664
சீட்டிழுப்பு திகதி 04.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,066,457.30
வெற்றி இலக்கங்கள் 14 24 57 66 K

சுப்பர் ஜக்பொட் 3,486,202/=
திகதி : 04.08.2021
வெற்றி வாரம் : 3215
வர்ணம் :
வெற்றி இலக்கங்கள் 04 08 23 56 மேடம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,661,360/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1503
சீட்டிழுப்பு திகதி 04/08/2021
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் B 26 34 63 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் 61,904,507/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1768
சீட்டிழுப்பு திகதி 04.08.2021
வெற்றி இலக்கங்கள் 29 34 50 61 K
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 26,176,816
தொ. பே.: 0112 334 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசுக் கட்சியின் முல்லை செயற்பாட்டாளர்

## ரிஜடி.யினரால் விசாரணைக்கு அழைப்பு

(முல்லைத்தீவு)

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மத்திய செயற்குழு உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமாகிய பீற்றர் இளஞ்செழியனை கிளிநொச்சி தீவிரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வு பிரிவிற்கு விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முல்லைத்தீவு மணற்குடியிருப்பில் அமைந்திருக்கின்ற அவருடைய வீட்டிற்கு சிவில் உடையில் சென்ற பொலிஸார் என தன்னை குறிப்பிட்டு கிளிநொச்சியில் அமைந்துள்ள பயங்கரவாத ஒடுக்குமுறை மற்றும் புலனாய்வு பிரிவிற்கு செல்லுமாறு குறித்த கடிதத்தை கையளித்து சென்றுள்ளார்.

குறித்த கடிதத்தில் பீற்றர் இளஞ்செழியனை நாளை (இன்று) காலை 11 மணிக்கு கிளிநொச்சி தீவிரவாத ஒடுக்குமுறை மற்றும் புலனாய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசாரணையில் வாக்குமூலம் ஒன்றினை பெறுவதற்காக வருகை தருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-03,281)

# அத்தியாவசிய காரணங்கள் இன்றி மாகாண எல்லைகளை கடக்கும் நபர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், அத்தியாவசிய காரணங்கள் அல்லாமல் வேறு காரணங்களுக்காக மாகாண எல்லைகளை கடக்கும் நபர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கடந்த தினங்களில் மாகாண எல்லையை கடந்து செல்ல முற்பட்ட பலர் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து அரச பணியாளர்களுக்கு மாத்திரமே திறக்கப்பட்டுள்ளது.



அத்துடன் நெருங்கிய உறவினர்களின் மரணச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக செல்பவர்களும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 25 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக பிரான்ஸ் மற்றும் அவுஸ்ரேலியாவிற்கு செல்ல முயன்ற 25 பேரை குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) மற்றும் கடல்சார் குற்றப் பிரிவு கைது செய்துள்ளது.

மூன்று நாள் சிறப்பு நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மானிப்பாய், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, பரந்தன், பருத்தித்துறை, நீர்கொழும்பு மற்றும் சிலாபம் ஆகிய இடங்களைச் சேர்ந்த சந்தேக நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். சிஐடியின் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் எஸ்எஸ்பி சமரகோன் பண்டா தலைமையிலான அதிகாரிகள் குழு இந்த சுற்றிவளைப்பை நடத்தியது. (ம-03)

# ஜனாதிபதி செயலகத்துக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட

## 42 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 26 ஆண்களும் 16 பெண்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதிபர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் வாகனப் பேரணி மூலம் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஜனாதிபதி செயலகத்துக்கான வீதியைக் குறுக்கிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் 10 வாகனங்களையும் பொலிஸார் கையகப்படுத்தியுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர்களிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம-03)

# பிலியந்தலயிலுள்ள வயோதிபர் இல்லத்தில் 26 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

பிலியந்தலயிலுள்ள வயோதிபர் இல்லத்தில் வயோதிபர்கள் உள்ளடங்கலாக 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பிலியந்தல பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி இந்திக்க எல்லாவல தெரிவித்துள்ளார்.

குறித்த இல்லத்தில் 20 வயோதிபர்களுக்கும், நிர்வாகக் குழுவைச் சேர்ந்த 6 பேருக்குமே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நிலவும் இடநெருக்கடியைக் கருத்தில் கொண்டு தொற்றாளர்கள் அனைவரும் வயோதிபர் இல்லத்திலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான வைத்திய வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. (ம-03)

# இலங்கையில் கோவிட்டால் 12 ஆயிரம் பேர் மட்டுமே வேலை இழந்துள்ளனர்

## சபையில் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

இலங்கையில் கோவிட்-19 தொற்றுநோய் பரவலினால் 12 ஆயிரம் பேர் மட்டுமே வேலை இழந்துள்ளதாக தொழிலாளர் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொழிலாளர் அமைச்சின் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி இந்தத் தரவுகளை வெளிப்படுத்தியதாகக் கூறிய அவர், இலங்கையில் இலட்சக்கணக்கான மக்கள் வேலை இழந்துள்ளனர் என்று கூறுவது பொய்யானது எனக் குறிப்பிட்டார்.

தேசிய குறைந்தபட்ச சம்பள (திருத்த) சட்டவரைபு மீதான விவாதத்தில் பங்கேற்ற தொழிலாளர் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார். (ம-03)

BIOLOGY - CHEMISTRY
வீடு வரல் - இரு மொழிகளிலும்
இரசாயனம் - 10 வருட விளக்கவுரை
Singam - 076 056 5786
உயிரியல் - விடை எழுதுவித்தல் (7560)
வித்யா - 077 665 5290

Personal Classes
பிரத்தியேக வகுப்புக்கள்
பௌதீகவியல் (physics)
2021, 2022,2023 உயர்தர மாணவர்களிற்கான
- சகல அலகுகள்.
- கடந்தகால வினாக்கள்.
தனியாகவும்/ குழுவாகவும் கற்பிக்கப்படும் (7541)
076 157 0107

தவறிவிட்டது
கணேஸ்வரம் அளவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட S.சந்திரசேகரன் என்பவருடைய 763314456V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கோண்டாவிலுக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (7570)
077 640 7657 | 077 500 1095

கூலியாள் தேவை
கூலியாள் தேவை. (ஆண்/ பெண்)
நாட் கூலியாக
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் (C-2460)
077 314 6548

சிறுநீரகம் தேவை
44 வயதான நபருக்கு O+ குருதி வகை உடைய சிறுநீரகம் தேவை.
(சன்மானம் வழங்கப்படும்) (C-2461)
075 624 6979
077 082 6547

காவலாளி தேவை
இரவுக் காவலுக்கு வேலையாள் தேவை.
(மாலை 5.00 மணி - இரவு 8.00மணி வரை)
பொலிகண்டியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.) (C-2459)
076 714 8059

காணி விற்பனைக்கு
தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் தெல்லிப்பளை வைத்தியசாலை பின்புறத்தில் இருந்து 400 மீற்றர் தூரம். (7569)
பார்வையிடும் நேரம் :
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை.
1 1/2 பரப்பின் விலை 10 இலட்சம்
077 814 7389, 077 614 7333

BOC Travels (pvt) Ltd
Hospital Road, Jaffna.
எமது நிறுவனமானது தற்போதைய Covid- 19 பரவல் காலத்திலும் விமானப் பயணச் சீட்டுக்களை வழங்குவதுடன் இணைந்ததான இதர சேவைகளையும் வழங்குகின்றது. (C-2462)
021 222 4575/76
070 384 9335, 070 395 1794

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக் கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-2438)
0768226240

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org